# மக்கள் மறுவாழ்வு

மலர்: 6 தை ஜனவரி 1988 விலை 75 காசுகள் இதழ்: 4




மறைந்த முதல்வர் எம். ஜி. ஆருக்கு எங்கள் அஞ்சலி

(கட்டுரை உள்ளே ...)

## இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை

# விருப்பத்திற்கு மாறாக அனுப்புவது மனித உரிமையை மறுக்கும் செயல்!

இந்தியாவிலிருந்து இலங்கை அகதிகளை திரும்பி அனுப்புவதில் இந்திய அரசு மனிதாபிமானம் காட்ட வேண்டும். அவர்கள் விரும்பாத வரை அவர்களை பலவந்தமாக தள்ள முயலக் கூடாது.

இலங்கையில் அமைதி திரும்பி விட்டால் இலங்கை அகதிகள் அங்கு திரும்பி விட வேண்டும் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அமைதி திரும்பி விட்டதா என்பதை தீர்மானிக்க வேண்டியவர்கள் மக்களே. சாதாரண தமிழ் மக்களின் வாழ்வுக்கு அங்கு ஆபத்து இருந்த போது அகதியாக இந்தியா வருவதற்கு தீர்மானித்தவர்களும் மக்களே. ஆனால் இந்தியா இலங்கை உடன்பாடு -இந்திய அமைதி காக்கும் படையின் நடவடிக்கை ஆகியவற்றின் பின்னும் இலங்கையின் எந்த பகுதியாவது அமைதிக்கு திரும்பி விட்டதாக கூற முடியாத நிலைதானிருக்கிறது.

ஆகஸ்ட் 1987ல் தாங்களாகவே முடிவு செய்து இலங்கை திரும்பிய அகதிகள் அங்கு அமைதியின்மை காரணமாக மீண்டும் இந்தியாவுக்கே திரும்பியுள்ளது இதை உறுதிப்படுத்துகிறது. எனவே அகதிகளை திருப்பி அனுப்புவதில் அவசரம் காட்டுவதை விடுத்து இலங்கையில் அமைதி திரும்பும் வரை, இதுவரை இவர்களுக்கு இந்திய அரசும் மக்களும் காட்டிய மனிதாபிமான ஆதரவை தொடர்ந்து அளிக்க வேண்டும்.

இலங்கையில் யாவரும் ஒரே வகையினர் அல்ல. அவர்கள் வாழ்ந்த இடம், அவர்கள் இங்கு வர சேர்ந்த சூழ்நிலை, வயது போன்ற காரணங்களால் அவர்கள் வேறுபடுகின்றனர். இன்று இந்தியாவில் உள்ள அகதிகள் கீழ்காணும் வகையினராக இருக்கிறார்கள்

1. முகாம்களிலுள்ள அகதிகள் அ) இலங்கையர் ஆ) இந்தியர் (இ) நாடற்றவர்.

2 முகாம்களுக்கு வெளியே உள்ள அகதிகள்-

அ. இந்தியாவில் வேலை செய்யும் அகதிகள்.

ஆ. பாதுகாப்பிற்காக திரும்பாதிருக்கும் அரசியல்வாதிகள், வல்லுனர்கள்.

இ. வட, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த 'இந்தியத் தமிழர்கள்'

ஈ. மாணவர்கள்,

உ. இலங்கை திரும்ப விரும்பாது இந்தியாவில் இருக்கும் 'ஓய்வு பெற்றோர்'

ஊ. வேறு நாடுகளுக்கு செல்வதற்காக அனுமதியை எதிர்பார்த்திருப்பவர்கள்.

எனவே சகல அகதிகளும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் திரும்பிச் சென்று விட வேண்டுமென்பது உச்சதமானதல்ல.

பெருந்தகையான அகதிகள் வரும்போது, பல காரணங்களுக்காக மீண்டும் அனைவருமே திரும்பி விட்டதாக இது வரை நடந்ததில்லை. இரண்டாம் உலக யுத்தத்தின்போது பாதிக்கப்பட்ட யூத அகதிகள் ஜெர்மணியை விட்டு செல்ல விரும்பாதது போல இனக் கலவரத்தின் போது மிகவும் பாதிக்கப்பட்டு வேதனையும் கசப்பான அனுபவங்களுமடைந்த மக்கள் மீண்டும் இலங்கை திரும்ப விரும்பவில்லை.

இந்தியா வந்துள்ள இலங்கை அகதிகளை பதிவு செய்யுமாறு இந்திய அரசு மறுவாழ்த்துறை இயக்குனரைப் பணித்திருப்பது இலங்கை அகதிகளை பெரிதும் அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது. புள்ளி சேமிப்பது போல இலங்கை அகதிகளை பதிவு செய்வதை வெறும் மறுப்பு தெரிவிக்க முடியாது.

ஆனால் இந்த அறிவிப்பு அதன் நோக்கத்தை நிறைவேற்றக் கூடியதாக இல்லை. 100,000 அகதிகளை பதிவு செய்வதற்கு 60 நாட்களே கொடுக்கப்பட்டுள்ளது. இது நிறைவேற்ற முடியாததொன்று. நவம்பர் 15 வரையில் கூட இப்பதிவு பற்றிய முறைகள் தீர்மானிக்கப்படவில்லை. ஆனால் டிசம்பர் 31 க்குள் இந்த பதிவுகள் நிறைவேற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. தவிர டிசம்பர் 13 க்குள் அனைவரும் திரும்பிவிட வேண்டும் என்று பயமுறுத்துவது, நடைமுறை

(15-ம் பக்கம் பார்க்க)

# உண்மையான சேவையை நினைத்து பார்க்க வேண்டும்

'தாயகம் திரும்பியோர்கள் பெயரால் கூத்தடிக்கலாமா ? என்று ஒருவர் எழுதியிருந்தார், இது உண்மையில் சரியானது தான்.

மூன்று வருடத்திற்கு ஒரு முறை திடீரென்று சிலர் தாய்கள் ஏதோ தாயகம் திரும்பியோர் மத்தியில் சேவை செய்து வருகிறவர்கள் போல தோன்றுகிறார்கள். மக்களுக்கு சேவை செய்வதில் தங்களை அர்ப்பணித்து விட்டவர்கள் போல டெலிகேட் தேர்தலில் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிறார்கள். இயக்குனராக வேண்டுமென்று துடிக்கிறார்கள்.

பதவி சுகம் காண்பதும், பணம் பண்ண வேண்டுமென்பதே இவர்களுக்கு குறிக்கோளாகும்.

ஆனால் இவர்களுக்கு எல்லாம் மாறாக சிலர் மிகவும் அடக்கத்தோடு சேவை செய்து வருவதை இவர் உணரவேண்டும் கடந்த காலங்களில் குறிப்பிட்ட அளவிற்கு - டெலிகேட்களில் நான் கைந்து பேர் தொடர்ந்து தாயகம் திரும்பியோர்கள் பிரச்சனைகளில் அக்கறை செலுத்தி வந்துள்ளதையும்- அவர்களது பிரச்சனை தீர்க்கவும், நன்மைகள் பெறவும் பாடுபட்டு வந்திருக்கிறார்கள்.

கடந்த வருடம் வரை நான் வங்கியின் டெலிகேட்டாக இருந்தவன். அந்த கால கட்டத்தில் நான் - என்னோடு சேர்ந்த சக டெலிகேட் நண்பர்கள் என்ன செய்தோம் என்று பார்த்தால் மலைப்பாக இருக்கிறது.

என்னுடைய சேவைகளுக்கு துணை நின்று சேவையாற்றிய மக்கள் மறுவாழ்வு - அதன் ஆசிரியர் திரு. டி எஸ். ராஜு அவர்களை மறந்து விட முடியாது

நாங்கள் செய்தவை எத்தனையோ. தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி மூலம் வேலை பெற்ற பலரது பிரச்சனைகள் தீர பாடுபட்டிருக்கிறோம்.


ராணிப்பேட்டை, 'சால்வெக்ஸ்' கம்பெனி மூடப்பட்ட வேலை இழந்த 13 தாயகம் திரும்பியோர் குடும்பங்களுக்கு பெரும் போராட்டத்திற்கிடையில் தூத்துக்குடி நூற்பாலையில் வேலை பெற்றுக் கொடுத்திருக்கிறோம் திருவலம் சர்க்கரை ஆலையில் பணி செய்யும் தொழிலாளர்களின் வீட்டுப் பிரச்சனைக்கு வழி கண்டோம், இன்வமும் 'மாலக் லெதர்ஸ்' ஸில் பணி செய்த தொழிலாளர்கள் பிரச்சனை குறித்து நீதிமன்றம் கூட சென்று போராடிக் கொண்டிருக்கிறோம்,

வங்கி அங்கத்தவர்களுக்கு மட்டுமல்ல; தனிப்பட்ட எத்தனை தாயகம் திரும்பியோர்கள் பிரச்சனைகள் தீரவும்- தன்மைகள் பெற்றுத்தரவும் நானும் மக்கள் மறுவாழ்வு ஆசிரியரும் முன்நின்றிருக்கிறோம். ஆசிரியர் டி எஸ். ராஜு அவர்கள் சென்னைக்கு வந்து, தன்னை அணுகும் எவரது பிரச்சனைகளை உரிய அலுவலர்களை அணுகி தீர்க்க முயற்சிகள் மேற்கொண்டு வந்துள்ளார்; தீர்த்திருக்கிறார் - இதற்கு இவர் சங்கமும் வைத்துக் கொள்ள வில்லை; சந்தா வசூலிக்க வில்லை...

எங்கள் பணிகளுக்கு ஒரு கால கட்டத்தில், வங்கி நிர்வாக இயக்குனராக இருந்த திரு. சுந்தரராஜ் இ. ஆ. ப அவர்களும், இயக்குனராக இருந்த எம். ஆர். லிங்கம் அவர்களும் பெரிதும் உதவியிருக்கிறார்; தாயகம் திரும்பியோர் பலருக்கு முன்வந்து நன்மைகள் பல செய்தார்கள் என்பதை மறக்க முடியாது- மறுக்கவும் முடியாது

உண்மையான சேவையை யார் நினைத்துப்பார்க்கிறார்கள் ? பணத்தையும் பதவியையும் குறிக்கோளாகக் கொண்டு போடுகிற வேசத்திற்கே மதிப்பும் மரியாதையும் அளிக்கிறார்கள்.

**எஸ். ஆறுமுகம்**
முன்னாள் டெலிகேட்
தா. தி. கூ. வங்கி
ராணிப்பேட்டை




## அளவில் சிறியதுஎன்றாலும்

### அவலங்களை எடுத்தியம்பும் கருவியிது!

பேரன்பு கொண்ட நண்பர்க்கு

மக்கள் மறுவாழ்வு என் கைகளுக்கு கிட்டும் போதெல்லாம் என் நினைவு அலைகள் கடல் கடந்து ஈழ நாட்டுக்கு போகின்றன. நானும், நீங்களும் மற்ற தோழர்களுடன் இலங்கையில் தமிழின முன்னேற்றங்களுக்காக கை கோர்த்து நின்றதும், உரிமைகளுக்காக உரத்த குரல் எழுப்பியதும் என் நெஞ்சை விட்டு அகலாத நினைவுக் களஞ்சியங்கள்.

தாயகம் திரும்பியவரின் அவல வாழ்க்கை நிலைமைகளை நீங்கள் ஒரு சிறிய படப்பிடிப்புக் கருவி கொண்டு நிழற் படங்களெடுத்து விநியோகிக்கிறீர்கள். படங்கள் அளவில் சிறிதென்றாலும், இன உணர்வுடன் படிக்கும் (பார்க்கும்) தமிழருக்கு வெள்ளித்திரையில் விசாலமான படத்தை தொடர்ந்து காண்பது போல அமைகின்றன.

இந்த பத்திரிகையை பணபலமின்றி எப்படி இவ்வளவு துணிச்சலுடன் நிலை குலைந்து போகாமல் தொடர முடிகிறது உங்களால் என்று வியந்து போகிறேன்.

கருத்துப்பிழைகளை காணவில்லை ஆனால் எழுத்துப் பிழைகள் ஏராளமாக புகுந்து விடுகின்றன. இதில் கவனம் செலுத்த வேண்டுகிறேன்.

உங்கள் நோக்கம் இன நலம் காப்பது; உங்கள் சமூக சேவை புனிதமானது; தொடரட்டும் இந்த நல்ல முயற்சி.

**எம். ஏ. வேலு**

கேரளம்

வாசகர்களுக்கும்,
ஆதரவாளர்களுக்கும்

**எங்களது**
**புத்தாண்டு, பொங்கல்**
**வாழ்த்துகள் !**




# மறுவாழ்வு உதவி என்று 'மலட்டு'ப் பட்டாவா?

## கொத்தடிமைகள் பொங்குகிறார்கள்!

கொடைகானலில் கொத்தடிமைகள் விடுதலை; அவர்களுக்கு மறுவாழ்வு என்று பரப்பரப்பாக பத்திரிகைகளில் செய்திகள் வந்தனவல்லவா? இந்த செய்திகள் வந்து ஒன்றரை வருடங்களாகி விட்டன.

ஆயினும்- அரசு அவர்களுக்கு மறுவாழ்வு உதவி அளிப்பதாக சுப்ரீம் கோர்ட்டில் தந்தது வாக்குறுதி.

மிகவும் கசப்பான அனுபவத்திற்கும், துன்பத்திற்குமுள்ளாகியுள்ள விடுவிக்கப்பட்ட இக்கொத்தடிமைகள் அண்ணா மாவட்ட ஆட்சித்தலைவருக்கு பல கோரிக்கைகளை முன் வைத்து, உடனடி விசாரணை ஒன்றை கோரியுள்ளனர்.

கடந்த காலத்தில் இவர்களுக்கு அரசு அளித்த வாக்குறுதிகள் இவை-

### அரசு அளித்த வாக்குறுதிகள்

1. எங்களது கொத்தடிமை வழக்கில் உச்ச நீதி மன்ற விசாரணைக் குழுவில் அண்ணா மாவட்ட கலெக்டர் திரு. மாதவன் நம்பியார் அவர்கள் கடக்காலில் 2400 ஏக்கர் இருப்பதாகவும், இலவச வீடுகள் கட்டவும் தயார் என்று உறுதி கூறினார்.

2. 12-7-87 அன்று மாவட்ட வருவாய் அதிகாரி, (ஆர். டி. ஓ) கொடைக்கானல் சப்கலைக்டர் ஆகியோர் நடத்திய ஆய்வின்படி சர்வே நம்பர் 66/1. 15 மற்றும் 1158ல் சுமார் 2000 ஏக்கர் நிலம் இருப்பதாக உறுதி அளிக்கப்பட்டது.

3. 20-7-86யில் மாவட்ட வருவாய் அதிகாரி ஆர் டி.ஓ. மறுஆய்வு செய்ததில் சர்வே எண்கள் 557, 558, 600 1-15ல் சுமார் 550 ஏக்கர்கள் இருப்பதாகக் கூறப்பட்டது.

4. 23-10-86 அன்று பெங்களூரில் நடந்த கப்பாட், தமிழக அரசு, யங் இந்திய புராஜக்ட் கலந்துரையாடல் அறிக்கையின்படி (காண்க: எண் 5) வீட்டு மனைப்பட்டா 1986 நவம்பர்க்குள்ளும். விவசாய நிலப் பட்டாக்கள் 1986 டிசம்பருக்குள் அனைவருக்கும் அவசியம் தரப்படும் என்று தமிழக அரசு உறுதி அளித்தது.

5. 8-8-86 அன்று சமூக நலத்துறைச் செயலர் உச்ச நீதி மன்றத்திற்கு சமர்ப்பித்த அறிக்கையின்படி (Affidavit Second Supplementary) தொழிலாளர் கோரிகையான 2 ஏக்கர் நிலம், வீட்டு மனை ஆகியவற்றை அரசு ஏற்றுக் கொண்டதாக அறிவித்தார். P. A. No. 10/7 & 10/8 GO Ms. No 1624 S. W. Dept dt 28-6-86)

6. 16-10-86 அன்று உச்ச நீதிமன்றம் தமிழக அரசின் மேற்கண்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் மறுவாழ்வுத் திட்டங்களை உடனடியாகத் தொடங்க அரசினைப் பணித்தது.

7. 6-11-86 அன்று தமிழக அரசு நில நிர்வாக ஆணையர் திரு. இராமமூர்த்தி இ. ஆ. ப. அவர்கள் பத்திரிக்கையாளர்களுக்கு அளித்த பேட்டியில் "195 ஏக்கர் நிலம்" இருப்பதாகவும் வளமான விவசாயத்திற்கு உகந்த நிலம் உள்ளதாகக் கூறினார். (ஹிந்து 7-11-86 இதழ்)

8. மேற்கண்ட குறிப்புகள் (1முதல் 7) அரசு உடனடியாக மறுவாழ்வுத் திட்டங்கள் தொடங்க போதுமான நிலங்கள் இருப்பதாக உறுதி கூறிய வாக்குறுதிகள்.

9. 1987 ஏப்ரல் 28ல் நாங்கள் நடத்திய போராட்டத்தால் அரசு எங்களுக்கு சில நிலங்களை சுட்டிக்காட்டி 'இது தான் உங்கள் நிலம்' என்று சொன்னது. ஆனால் அளிக்கப்படவில்லை.

10. செப்டம்பர் 1987ல் கொடுப்பதற்குப் போதுமான நிலங்கள் இல்லாத காரணத்தால் முதலில் 1 ஏக்கர் நிலம் மட்டும் தரப்படும். பிறகுஆக்கிரமிப்புகளை அகற்றி இரண்டாவது ஏக்கர் தரப்படும் எனக் கூறப்பட்டது. சில கடும் நிபந்தனைகளுக்குப் பின்னர் இதனை ஏற்றுக் கொண்டோம்.

### எங்களது பிரச்சனைகள்

1. அரசு தந்த வாக்குறுதிகள் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. 1986 டிசம்பருக்குள் அரசால் நிலத்தை அடையாளம் காட்டக்கூட இயலாமல் போயிற்று.

2. கடந்த ஒரு மாதமாக மேற்போக்காக அரசு நிலம் அளந்து வருகிறது. ஆர்.டி.ஓ. எங்களிடையே பெரும் குழப்பத்தை உண்டுபண்ணி பிளவு ஏற்படுத்தும் முயற்சியாக முதலில் சிலருக்கு வரிசையாகவும் பிறகு குலுக்கல் முறையிலும் நிலம் தருவதாக அறிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி

# பேரவைக் கூட்டம்

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் பன்னிரண்டாவது பிரதிநிதித்துவ பேரவைக் கூட்டம் எதிர்வரும் 27-1-88 புதன்கிழமை அன்று காலை 10-30 மணியளவில் சென்னை அண்ணா பவளவிழா கூட்டுறவு கல்யாண மண்டபம் (சென்னை மத்திய கூட்டுறவு வங்கிக் கட்டிடம்), எண் 114/1 பிரகாசம் சாலை (பிராட்வே) சென்னை 600 108 இல் நடைபெற விருக்கிறது.

இக்கூட்டத்தில் 1986-87 ஆண்டறிக்கை, கணக்கு பட்டியல் வைத்தல், வரவு செலவு திட்டம் அங்கீகரித்தல் மற்றும் தாயகம் திரும்பியோருக்கு வழங்கப்பட்ட வியாபாரக்கடன் மீது விதிக்கப்பட்ட வட்டி விகிதம் 12 சதவீதத்திலிருந்து 4½ சதவீதமாக குறைத்து சலுகை அளித்ததன் பேரில் ஏற்பட்ட வசூலிக்க முடியாத தொகையை தள்ளுபடி செய்வது பற்றி தீர்மானித்தல் முதலாக பல விடயங்கள் இடம் பெற விருக்கின்றன ○

# வீடுகளையும் விழுங்கிடும் இடைத்தரகர்கள் !

தாயகம் திரும்பியோர்களுக்கு வழங்கப்படும் வீட்டுக்கடனில் பல்வேறுபட்ட ஊழல்கள் நடந்து வருவதை யாவரும் அறிவார்கள்.

இதில் ஈடுபடும் இடைத்தரகர்கள்,காண்டிராக்ட்காரர்கள் எப்படி எப்படி எல்லாமோ கொள்ளை அடிக்கிறார்கள். தாயகம் திரும்பியோர்களை ஏமாற்றி ஏப்பம் விடுகிறார்கள்.

வீட்டுக்கடனை வாங்கிக் கொடுப்பதிலும், வீடுகளைக் கட்டிக் கொடுப்பதிலும் பல ஊழல்கள் புரிந்து கொள்ளையடிப்பது மட்டுமல்ல; இப்போது புதுமாதிரியான கொள்ளையும் அடித்து சம்பந்தப்பட்ட தாயகம் திரும்பியோரை முழுமையாக ஏமாற்றி, ஏப்பம் விட முனைந்திருக்கிறார்கள்.

தாயகம் திரும்பியோர்கள் சுயமாக வீடுகட்ட முடியாத சூழ்நிலையில் இந்த இடைத்தரகர்களையும் - காண்டிராக்ட்காரர்களையும் நாடுகிறார்கள். வீட்டுக் கடனை பெற்று வீடுகட்டிக் கொடுப்பதாக இவர்களே முன் வந்து 'ஏஜெண்டுகள்' மூலம் அவர்களது மறுவாழ்வுத் திட்டக் குடும்ப அட்டைகளையும் கடவுச் சீட்டுகளை வாங்கிக் கொண்டு காரியத்தில் முனைகிறார்கள்.

இந்த இடைத்தரகர்கள்- காண்டிராக்ட்காரர்கள் அரைகுறையாக வீடுகள் கட்டிக் கொடுப்பதும் உண்டு; கடன் உதவி மூலம் கிடைக்கும் பணத்தை முழுமையாக ஏப்பம் விட்டு விடுவதும் உண்டு. ஒரே வீட்டுமனையை பலருக்குமாற்றி எழுதி வீட்டுக்கடன் பெற்று நாமம் போடுவது போன்ற காரியங்களும் இவர்களுக்கு கைவந்தக் கலை.

இப்போது கட்டிய வீடுகளையே அந்த வீட்டுக்கு உரிமையுள்ள தாயகம் திரும்பியோர்கள் இல்லாமலே விற்று விடுவதாக நம்பகமான தகவல் நமக்கு கிடைத்துள்ளன.

தாயகம் திரும்பியோர்களைப் பொறுத்தவரை வீடு கட்ட வேண்டும்என்ற ஆசையோடு- தாம் சுயமாக எதுவும் செய்ய முடியாத நிலையில் - இந்த இடைத்தரகர்களை நாடுகின்றார்கள் - குடும்ப அட்டை முதலான வற்றையும் அவர்களிடமே ஒப்படைத்து விடுகிறார்கள்.

அதன் பின்னால் இவர்களிடம் இடைத்தரகர்கள் வெற்றுத் தாள்களில் கையொப்பம் வாங்கிக் கொள்வதோடு சரி. பிறகு வீட்டுக்கடன் பெறுவதோ, வீட்டு மனை வாங்குவதோ வீடுகட்டுவது குறித்தோ, சம்பந்தப்பட்ட தாயகம் திரும்பியோர்களுக்கு தெரிவதே இல்லை. கடன் வாங்கும் போது அது சம்பந்தப்பட்ட (அலுவலக) கடன் கட்டு எண் முதலான விபரங்கள் கூட தெரிவதில்லை

வீட்டுக்கடன் பெற்று கட்டிய வீடுகள் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டாலும், இவர்கள் அவற்றில் குடியிருப்பதில்லை, வேலை வாய்ப்பு நிமித்தமாக கொடைகானல் போன்ற மலைப்பகுதிக்கு சென்று விடுகின்றன.

இந்த வாய்ப்புகளை யெல்லாம் பயன்படுத்திக் கொண்டு அவர்களது சம்மதம் இல்லாமலே - அவர்களுக்கு தெரியாமலே அவர்களுக்கு உரிமையான வீடுகளை பிறருக்கு விற்று வருகிறார்கள்.

வீடுகள் வாங்குவது, விற்பது, பதிவு செய்வது சம்பந்தமான சம்பந்தபட்ட அதிகாரிகள் அலுவலர்களை 'கையில் போட்டுக்' கொண்டு இந்த காரியங்களில் ஈடுபடுகின்றார்கள். வீட்டுக் கடன் பெற செய்யப்பட்ட அடமானப்பத்திரங்களை யெல்லாம் அப்புறப்படுத்திவிட்டு வீட்டிற்குரியவர் வீட்டை விற்று விட்டதாக ஆள்மாறாட்டம் செய்து பத்திரம் பதித்து வைத்து விடுகிறார்கள்.

புதுக்கோட்டையில் சின்னப்ப நகர் என்ற காலனியில் HLO 176/ 79-80, 183/ 79-80, 182/ 79-80, 167/ 79-80 ஆகிய எண்களுக்குரிய கடன் கட்டுப்படி கடன் பெற்றுக் கட்டப்பட்ட வீடுகள் இவ்வாறு விற்கப்பட்டிருக்கின்றன.

இம்மாதிரி பல வீடுகளை இடைத்தரகர் - காண்டிராக்ட்காரர்கள் வீட்டிற்குரிய தா[illegible] திரும்பியோர்கள் சம்ம[illegible]த இல்லாமலே- தெரியாமலே விற்று ஏப்பம் விட்டு வருகிறார்கள். O

---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

3. அளக்கப்படும் நிலங்கள் அனைத்தும் பிரச்சனைகுரியன வாக உள்ளன; சர்வேயர்கள் அளவிடும்போதே சங்கிலிகள் பறிக்கப்படுகின்றன,நிலம் வைத்திருப்பவர்கள் அளந்த நிலங்களின் அடையாளங்களை அழித்து விடுகின்றனர்

4. இதுவரை 97 குடும்பங்களுக்கு மட்டுமே விவசாய நிலம் அளக்கப்பட்டுள்ளது. இவற்றில் 71 பேருக்கு அளக்கப்பட்ட நிலம் ஓரளவு விவசாயத்திற்கு ஏற்றதாக இருந்தாலும் உள்ளே பிரவேசிக்க முடியாமல் பிரச்சினைக்கு உரியதாயிருக்கிறது. 27 பேருக்கு அளக்கப்பட்ட நிலம் விவசாயம் செய்யமுடியாத பாறை நிலமாக உள்ளது.

5. அதிர்ச்சியூட்டும் நடவடிக்கை:- 49 பேருக்கு மட்டுமே நிதத்தைக் காட்டிவிட்டு 21-11-87 அன்று ஆர். டி. ஓ. 187 குடும்பத்திற்கும் பட்டா தயாரித்து வந்து (நிலங்கள் அளிக்கப்படாமலே) எங்களை ஏற்றுக்கொள்ளக் கட்டாயப் படுத்துகிறார்.

6 சிலவருடங்களுக்கு முன்பு அரசு இதே இடத்திற்கு வந்த ''மைராடா'' காலனி அகதிகள் ''மலட்டுப்பட்டாக்கள்'' (நிலமற்ற வெறும் காகிதப் பட்டாக்கள்) தந்து பெருந்துன்பத்திற்கு ஆளாக்கியுள்ளது. அந்நிலை நாங்களும் அடைய விரும்பவில்லை.

7. தற்போது இப்பகுதியில் 74 ஏக்கர் நிலம் மட்டு மே உள்ளது என்று கலம் தாசில்தார் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

8. 200, 300 ஏக்கர் ஆக்கிரமிப்பு நிலமுள்ள பெரும் பணக்காரர்களை அரசு தொடவேயில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

**எங்களது கோரிக்கைகள்**

1 உடனடியாக 137 குடும்பங்களுக்கும் அரசு விவசாயத்திற்கு உகந்த நிலம் அளிக்கப்பட வேண்டும்

2. கொடைக்கானல் ஆர். டி. ஓ. அவர்கள் எங்கள் மறுவாழ்வுத் திட்டத்தில் நல்லெண்ணத்துடன் செயல்படுவதில்லை. பிரிக்கும் சூழ்ச்சி ஏமாற்றும் எண்ணம், மிரட்டுதல் இவை போன்றவற்றில் ஈடுபடுவதால் இத்தகைய அதிகாரியிடம் இனிமேலும் ஒத்துழைப்பது கடினமான செயல்.

3. அரசு கூக்கால் பகுதியில் 137 குடும்பங்களுக்கும் போதுமான நிலம் உள்ளதா? என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்கவேண்டும். குளிரிலும் மழையிலும் கடந்த ஓராண்டாக அரசின் வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்டு வாழ்கின்றோம். அரசுக்கு நில ஆக்கிரமிப்புகளை நீக்கி எங்களுக்கு நிலம் தரும் எண்ணமோ, துணிவோ இல்லை என்று எங்களுக்குத் தோன்றுகிறது.

4 அரசு உடனடியாக தகுந்த நிலம் தர எல்லா முயற்சிகளையும் எடுக்கத்தவறியதால், இதுவரை அரசுடன் எல்லா முயற்சிகளிலும் ஒத்துழைத்த நாங்கள் வேறு நடவடிக்கைகளில் இறங்க, அரசின் மெத்தனத்தால் கட்டாயப்படுத்தப் படுகிறோம்; கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில் நாங்கள் இழிவு படுத்தப்படுகிறோம்.

5, சமூகம் அவர்கள் எங்களுக்கும் போலீஸ் பாதுகாப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்

5 மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாக ஈடுபட்டு உடனடி தீர்வு எடுத்து நிலங்கள் தர ஆவணசெய்ய வேண்டுகிறோம் எங்களது ஒன்றரை வருடப் பொறுமைக்கு உங்களிடம் உடனடி செயல்பாடு வேண்டுகிறோம்.

இவ்வாறு அரசு தரும் வாக்குறுதிகளை நிறைவேற்ற வற்புறுத்தியுள்ளனர். O

# பொங்கலோ பொங்கல்

பொங்கிடும் பொங்கலோடு தை பிறக்கிறது. பொங்கல் என்றவுடன் நமக்கு புதுப் பானையும், புத்தரிசியும், மஞ்சளும், இஞ்சியும், செங்கரும்பும், சர்க்கரையும், மாடும்-சூரியனும் கூட-நினைவுக்கு வருகின்றன- எல்லாமே பொங்கலில் இடம் பெறுகின்றன.

பொங்கலோ பொங்கல் என்று எல்லோருக்கும் பொங்கல்தான்.

பொங்கல் உழவர்களின் திருநாள். உழவு தொழிலில் ஈடுபடும் அத்தனைபேருக்கும் பெருநாள். இந்நாள் உழவர்க்கும், உழவர் தமக்கு துணை செய்யும் மாடுகளுக்கும், மழையைப் பொழியும் வருணனுக்கும்... என்று தமக்கு உறுதுணையாக இருக்கும் அனைவருக்கும் நன்றி கூறும் நாள்

வருடம் பிறந்து விட்டால் வழக்கம் போல கொண்டாடப் படுகிறது. இருந்தாலும், இல்லாவிட்டாலும்- கடனோ உடனோ பட்டு - தமது வீட்டில்- பட்டி, தொட்டியில் பொங்கலோ பொங்கல் என்று பொங்கலிடுகின்றனர்

புதுப்பானையில், புத்தரிசியும், சர்க்கரையும் பொங்கி வழிவது போல அவனுள்ளமும் பொங்கிவருகிறது - எல்லோர் உள்ளமும்மகிழ்ச்சியாலா பொங்குகிறது ? இல்லை. இல்லாமை, சிலரை பொங்க வைக்கிறது.

உழவன் கணக்குப்பார்த்தால் உலக்குக்கு கூட மிஞ்சாது என்பது பழமொழி. அவனுக்கு கணக்கு பார்க்கக் கூட வழவு ஏது ?

வரட்சி தான் அவன் கணக்கில் இருக்கிறது - கண்ணால் தெரிவதும்.

அடிக்கடி வரட்சி- தொடந்தும் வரட்சி இந்த வரட்சியில் உழவு தொழில் பாழ்பட்டு வருகிறது. வரனத்தை நம்ப முடியவில்லை; ஆழத் தோன்றிய கிணறுகளிலும் தண்ணீரை காணமுடியாத கொடுமை.

இந்த கொடுமையிலும் வானம் பெய்யாவிட்டாலும், பூமி கசியாவிட்டாலும் இவன் வியர்வை சிந்துகிறான்; கையில் இல்லாவிட்டால் கடன் படுகிறான். பசியில் வாடினாலும் அயராது உழைக்கிறான். உழுது பயிர் செய்கிறான். உலகுக்கு உணவளிக்கின்றான். உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர் என உலகினை உய்விக்கிறான்

இப்படி உழுதுண்டு வாழ்ந்தும் மற்றெல்லோரும் தொழுதுண்டுஇவன்பின்செல்லத்தக்கவனாக இருந்தும் இவனே இரந்து செல்லும் நிலையில் இருக்கிறான்.



வரட்சி என்பதே இவனுக்கு சாபக்கேடு. உணவுக்கும், நீருக்கும், வேலைதேடியும் பல மைல்கள், பல ஊர்களைச் சுற்றித்திரியும் நிலைமைக்கு ஆளாகி இருக்கிறான்

உணவு உற்பத்தி உபரியாக அபரிமிதமாக இருக்கிறது என்பது அரசின் தகவல்கள். ஆனால் இவனுகடு இவனைப் போன்ற கோடானு கோடி கிராம மக்களுக்கு பசி என்பதே வாழ்க்கையாகிவிட்டது.

கிராமங்களே இந்தியாவின் முதுகெலும்பு- உண்மையான இந்தியாவை கிராமங்களிலேயே காணமுடியும் என்றார் மகாத்மா காந்தி.

ஆனால் நகரங்களை கண்டு கொண்டு கவனிக்குமளவிற்கு கிராமங்களை கண்டுக்கொள்வதில்லை - கவனிப்பதில்லை. கிராம மக்களின் முன்னேற்றத்திற்கு 20 அம்சத்திட்டங்கள் வழி வகுத்தாலும், பல்வேறு பட்ட திட்டங்கள் போடப்பட்டாலும் அது சரி வர செயல் படுத்தப்படுவதில்லை; இந்தியாவின் முதுகெலும்பான கிராமங்கள் கூன் விழுந்து தள்ளாடும் நிலையிலேயே இருக்கின்றன.

சுற்றுப்புறச் சூழலின் அழிவும் அவ்வழிவில் ஏற்பட்டு வரும் வரட்சியும், ஆள்வோரின் அலட்சியப்போக்கும், பாரபட்சங்களும் கிராமத்து மக்களை நம்பிக்கை இழக்கச் செய்து விட்டது. பரம்பரை பரம்பரையாக நிரந்தரமாக நம்பி இருந்த உழவுத்தொழிலை கைவிட்டு விட்டு, பூர்வீக கிராமங்களை விட்டுவிட்டு நகரங்களை நோக்கி நடையைக்கட்டும் நிலைமைக்கு உள்ளாகி வருகிறார்கள்.

"வீட்டைவிட்டுப் போன தில்லை
வெளியூரக் கண்ட தில்லை
பட்டி நெறஞ்சிருக்க
பால்பசு வந்திருக்க
பட்டணம் தெரியாம
பக்குவமாய் இருந்த காலம்
விட்டு மறஞ்சதய்யோ
வீடெல்லாம் காடாச்சே
சிறு சம்பா பெருச்சம்பா
சீரகச் சம்பா வரகு
பெறுஞ்சம்பா அவரை
துவரை யெல்லாம்
அழிஞ்சு முடிஞ்சததனால்
அரவயறு தண்ணியில்லே
தெய்வத்து சோதனையோ
தேசம் விட்டு போவதற்கு"

என்று உள்ளம் பொங்கி பிழைப்பைத் தேடி பிற ஊருக்குப் பெயர்ந்து செல்லும் காட்சிகள் அன்றாட கிராமத்துக் காட்சிகள் ஆகிவிட்டது.

தைப்பிறந்தால் வழிப்பிறக்கும் என்பர் எத்தனை தைபிறந்தாலும் இங்கே வழிபிறக்காதோ ?

- தேனீ

---

## துன்பம் தொடர்ந்தொழிய !

**ப. மணிவண்ணன்**

அஞ்சி யஞ்சி அல்லலுற்று
அழுகின்ற மாந்தருக்கு
நெஞ்சிலே பால் வார்ப்பாய்
நீணிலத்தில் வாழ வைப்பாய்
நெஞ்சோறு அவர்க்களித்து
சேர்ந்தணைப்பாய்தைப்பாவாய்
துன்பம் தொடர்ந்தழிய
துயரமது வெகுண்டோட
இன்பம் தழைத்தோங்க
இதயங்கள் நிறைந்தோங்க
அன்பு சிறந் தோங்க
அகிலமதில் வளமோங்க
பண்பு எழுந்தோங்க
பாரதனில் நலனோங்க
என்பும் சதையு மென
எவரிடத்தும் செழித்தோங்க
நன்னெஞ்சம் கொண்டோர்
தன் வாழ்வு தனை மறந்து
தரணிக்கு உழைப்போர்கள்
என்றும் நிலைத் தோங்க
எழுந்தருள்வாய் தைப்பாவாய்!

## தொழிலாளர் நலக் கல்வி:

# பிரச்சனைப் பற்றி அறியும் ஆற்றலை 'வளர்ப்பதே குறிக்கோள்

தொழிலாளர்களுக்குக் கற்பிப்பது என்பது அவர்களிடம் ஒரேயடியாக வெறும் கருத்துக்களை மட்டும் பொழிவதல்ல.

தொழிலாளிகள், தொழிற்சங்கவாதிகள், குடிமக்கள் என்ற முறையில் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி அறியும் ஆற்றலை அவர்களிடையே வளர்ப்பது இதனுடைய குறிக் கோளாகும்.

இந்த அறியும் ஆற்றல் படிப்பதால் வளரும், எனவே கற்றுக் கொடுக்கும் முறை படிப்பதில் ஆர்வம் காட்ட தொழிலாளர்களுக்கு உதவவேண்டும்.

(1) தொழிலாள - பயிற்சியாளர்கள் பள்ளீச் சிறுவர்கள் அல்ல என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்

(2) அவர்கள் கல்வி அறிவு அற்றவர்களாகவோ அல்லது மாணவர்கள் என்ற முறையில் அனுபவமில்லாதவர்களாகவோ இருக்கலாம். வகுப்பு அறைச் சூழ்நிலைக்கேற்ப தங்களை மாற்றிக் கொள்வது அவர்களுக்கு கடினமாக இருக்கலாம்

(3) வயது வந்தவர்களாக இருப்பதால் அவர்களுடைய சிந்தனையிலும் நடத்தையிலும் திட்டவட்டமான போக்கு காணப்படுகிறது- பிறர் தங்களுக்கு கற்பிப்பதை அவர்கள் எதிர்க்கலாம்.

(4) வாழ்க்கையிலே இவர்களுக்கு அதிக அனுபவம் உண்டு அவர்களுடைய அனுபவத்தோடு ஒட்டிக்கற்பித்தால் அவர்களால் பொருளைப் புரிந்து கொள்ள முடியும்.

(5) சொல்லாற்றல் அவர்களுக்கு மிகக்குறைவாக இருக்கலாம். அவர்களுடைய எண்ணங்களை வெளியிடுவது அவர்களுக்குக் கடினமாக இருக்கலாம்- எண்ணங்களை வெளியிடும் ஆற்றல் இல்லாததை குறைந்த அறிவுடைமை என்று தவறாக புரிந்து கொள்ள கூடாது.

(6) அவர்களுடைய உலகம் குறுகியதாக இருக்கலாம். அவர்களுடைய அன்றாட வாழ்க்கையோடு நேரிடையாகத் தொடர்பில்லாத பொருள்களை கற்பதில் அவ்வளவாக விருப்பமில்லாது இருக்கலாம்.

(7) கண்கூடாக உணர்ந்து அறிய முடியாத சிந்தனைகளை அவர்களுக்குப் பழக்கமில்லாது இருக்கலாம். பாடத்தை ஏட்டளவில் நடத்துவதை விரும்பாதிருக்கலாம்.

தொழிலாளப் பயிற்சியாளரின் இந்தத் தனிப்பட்ட இயல்புகளை ஆசிரியர் நன்கு கருத்தில் கொள்ள வேண்டும்

### பாடங்களை தயார் செய்யுங்கள்!

உங்களை நீங்களே பின் வரும்மாறு கேட்டுக் கொள்ளுகள்:-

* நான் கற்றுக் கொடுக்கப் போகும் பொருள் என்ன?

* பொருளைப் பற்றிய கருத்துக்கள், சார்ந்த செய்திகளின் மூல நூல்கள், வெளியீடுகள் எவை?

* அதைப் பற்றி பயிற்சியாளர்கள் எந்தளவு அறிந்திருக்கிறார்கள்?

* எந்த விளக்கங்கள் பொருளைச் சுவையுள்ள தாக்கும்?

* கற்பிப்பதற்கு நான் என்னென்ன சாதனங்களைத் தேர்ந்தெடுக்கலாம்?

இந்தக் கேள்விகளுக்கு உங்களிடம் தயாராக விடைகள் இருக்கும் என்று கருதிக் கொண்டிருக்க வேண்டாம். விடைகளை சிந்தித்துக் கண்டு பிடியுங்கள். இந்தக் கேள்விகளுக்கு விடைகளை எழுதினால், நீங்கள் உங்களுடைய "பாடத்திட்டத்தை" தயாரித்தவர்கள் ஆவீர்கள்.

ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு பாடத் திட்டத்தை தயாரிக்க வேண்டும். அது கற்பிப்பதையும் அதிகப் பயனுள்ளதாக்கும் நன்றாகத் தயாரிக்கப்பட்ட பாடம் உங்களுக்குப் பின் கூறப்படும் முறையில் உதவ வேண்டும்.

1. கேட்போரின் ஆர்வத்தைத் தூண்டும் முறையில் பாடத்தை தொடங்கப் பயன்பட வேண்டும்.

2 பாடத்தைக் கட்டுக் கோப்பான தன்மையிலே அளிக்க உதவ வேண்டும்.

3. பாடப்பொருளை விளங்கும்படி மறுபடியும் தொகுத்துக் கூற அல்லது சுருங்கக் கூற உதவ வேண்டும்.

### பாடத்திற்கு தயார் செய்தல்

தொழிலாளப் பயிற்ச்சியாளர்கள் உடல் அளவில் வகுப்பு அறையில் இருந்தாலும் அவர்களுடைய உள்ளங்களில் கவலைகளும் பொறுப்புகளும் நிறைந்திருப்பதால் அவை வெளியே அலையலாம்

கற்கும் பொருளுக்கு அவர்களுடைய மனதைத் திருப்புங்கள். உடனடியாக ஆர்வம் ஊட்டக் கூடிய வகையிலே பொருளைப் பற்றி பேசத் தொடங்குங்கள்.

### கவரும் முறையில் சொல்லுங்கள்!

1. கற்றுக் கொடுக்கும்முறை உயிரோட்டம் உள்ளவதாக இருக்கட்டும். பயிற்ச்சியாளர்கள் கவனிப்பதோடு மட்டுமின்றி இதில் தீவிரமாகப் பங்கும் கொள்ள வேண்டும்.

"நான் கேட்டால் மறக்கிறேன்" "நான் பார்த்தால் நினைவில் வைக்கிறேன்", "நான் செய்தால் அறிகிறேன்" என்ற பழமொழியை கருத்தில் கொள்ளுங்கள்.

2. கேள்விகளைத் தாராளமாகவும், ஆனால் தெளிந்த அறிவுடனும் பயன் படுத்துங்கள். பயிற்ச்சியாளர்களையும் கேள்வி கேட்குமாறு தூண்டுங்கள். இருவழித் தொடர்பு இருக்கட்டும்.

3. கதைகள், நொடிக்கதைகள், விளக்கம் இவை போன்றவற்றின் மூலம் கற்றுக் கொடுப்பதை சுவையுள்ள தாக்குங்கள்.

4. கரும்பலகையையும், கண்டு கேட்டு அறிய கூடிய சாதனங்களையும் முழு அளவில் பயன் படுத்துங்கள்.


2. முதலில் பயிற்சியாளர்களுக்குத் தெரிந்த எளிதாக உள்ள குறிப்புக்களோடு பாடத்தைத் தொடங்குங்கள். பின்பு புதிதாகவும், கடினமாகவும் உள்ள மற்ற குறிப்புக்களை கூறுங்கள்.

தெரியாத சிக்கலாக உள்ள பொருள்களைப் பற்றி பயிற்சியாளர் புரிந்து கொள்ள இம்முறை உதவும்

6 நினைவில் வைத்து கொள்வதற்கு முக்கியமான குறிப்புகளைத் தொகுத்துக் கூறுங்கள்.

(12-ம் பக்கம் பார்க்க)

# சேலத்தில் சாமி நகர்



சாமி நகர் காலனி

தாயகம் திரும்பியோர்களின் வீட்டுக் கடனை இடைத்தரகர்களும்-காண்டிராக்ட்காரர்களும் ஏப்பமிட்ட கதைகள் ஆயிரம் உண்டு. இவர்களால் ஆயிரக்கணக்கான வீடுகள் - வெறும் மனையோடும், அத்திவாரத்தோடும், குட்டிச் சுவர்களோடும், கூரையில்லாமலும் நின்று போய் இருப்பதை காணலாம்.

இந்த ஊழல்களுக்கும் மத்தியிலும்கூட கொஞ்ச காண்டிராக்ட்காரர்களும், மிக நாணயத்தோடு வீடுகள் கட்டிக் கொடுத்துள்ள தாயகம் திரும்பியோர் குடியிருப்பதைக் காணலாம்.

இதற்கு ஒரு உதாரணம் சேலம் நகரிலுள்ள சாமி நகர் காலனிகள்.

இந்த காலனிகளை சென்று பார்க்கும்போது நமக்கு திகைப்பாகவும் அதே வேளையில் திருப்தியாகவும் கூட இருக்கிறது.

நாம் சென்று பார்த்த வேளையில் அங்கு ஒவ்வொரு வீட்டிலும் தாயகம் திரும்பியோர் குடியிருக்கிறார்கள்.

இந்த காலனிகள் சேலத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்திலுள்ள அமானி கொண்டலாம்பட்டி என்ற பகுதியில் இருக்கிறது.

சாமி நகர் ஒன்று, சாமி நகர் இரண்டு என்று இரண்டு காலனிகள் இருக்கின்றன. ஒன்றில் 116 வீடுகள் கட்டப்பட்டுள்ளது. இரண்டில் 101 வீடுகள். 80 வீடுகள் கட்டப்படவிருக்கின்றன. அதற்கான வேலைகள் நடந்துகொண்டிருந்தன, வீடுகளை தனித்தனியாக அல்லாமல் சேர்த்திணைத்துக் கட்டியிருக்கிறார்கள். 18'X'13 (234ச.அ) அடி அளவாகும்.

கோயில், பொதுகிணறு உண்டு. கழிவுநீர் வடிகால் வசதியில்லை; குடித்தண்ணீர் வசதி, மின்சார வசதியில்லை.

''நாங்கள் ஊராட்சிக்கு வரி செலுத்தியும் இன்னமும் இந்த வசதிகள் செய்துக் கொடுக்கப்படவில்லை'' என்று தெரிவிக்கின்றனர்.

தாயகம் திரும்பியோருக்கு வேலை இருந்தால் வீடு இல்லை; வீடு இருந்தால் வேலை இல்லை என்ற நிலையில்தான் இருக்கிறார்கள் புதுக்கோட்டை போன்ற பகுதிகளில், வீட்டுக்கடன் பெற்று வீடுகள் 'கட்டி'க் கொண்டாலும் வாழ முடியாது - வேலை இல்லை என்று இடம் பெயர்ந்து போய் விட்டார்கள்.

இங்கே வேலைப் பிரச்சனை இல்லை என்று தெரிவிக்கிறார்கள். சேலத்திலுள்ள சவுத் இந்தியன் ஸ்டீல் பிளாண்ட், பருத்தி மில், பிளாவர்மில், ஆயுல் மில். ''மொசைக்'குக்கு தேவையான வெள்ளைக்கற்கள் அரைக்கும் மில்கள் போன்றவற்றில் வேலை செய்கிறார்கள். சிலர் ஆட்டோ டிரைவர்களாக இருக்கிறார்கள். மேற்படி வேலைகளில் ஆண்கள் நாளொன்றுக்கு ரூபா 20 வரை தினக்கூலி பெறுகிறார்கள். பெண்கள் 10 வரை பெறுகிறார்கள்.

வீடுகள் கட்டிக் கொடுத்து காலனியை உருவாக்கியவர் 'ஆட்டோ' பெரியசாமி என்பவர் - தற்போது தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் சேலம் டெலிகேட்களில் ஒருவராக இருக்கிறார். இவரது பெயராலேயே அந்த காலனிகள் 'சாமிநகர்' என்று அழைக்கப்படுகிறது.

"நான் நன்றாக இவற்றை அமைத்துக் கொடுத்திருக்கிறேன். ஆனாலும் என்னை தூற்றியே வருகின்றனர்' என்று பெரியசாமி தெரிவித்தார்.



பெரியசாமி

"நானே சொந்தமாக வாங்கிய இடத்தில் இந்த வீடுகளை கட்டிக் கொடுத்தேன். தாயகம் திரும்பியோர்களுக்கான வீட்டு கடன் திட்டத்தில் ரெடிபில்ட் திட்ட அடிப்படையிலேயே இதை கட்டிக் கொடுத்தேன். முதலில் வீடுகட்டி முறைபடி அரசிடம் ஒப்படைத்த பின்னர் அதற்குரிய கடன் தொகையை பெற்றேன்.

"ஆனால் என் மீது திட்டமிட்டு துஷ்பிரச்சாரம் செய்து செய்து வருகின்றனர்.

சிலர் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்துக் கொண்டு தூற்றி வருகின்றனர்,

ஒரு குறிப்பிட்ட பிரமுகர் மூலம் எனக்கு அவப்பெயர் ஊட்டி வருகின்றனர்.

நான் அகதிகளுக்கான வீட்டுக்கடனில் மோசடி செய்துள்ளதாகவும், ரூபா 5000 க்கும் பெறுமதியில்லாத வீடுகளைக் கட்டிக் கொடுத்திருப்பதாக கூறிவருகிறார்கள்.

தரக் குறைவாகவெல்லாம் பேசி வருகின்றனர். இதற்கெல்லாம் காரணம் சுயநலம் அரசியல் ஆதாயம் தேடத்தான்.

இன்னும் பல வீடுகள் கட்டப்படவிருக்கின்றனர். இவைகளையும் கட்ட விடாமல் முயலுகின்றனர்'' என்று தெரிவிக்கிறார்.

நாம் பார்க்கும் பல வீட்டுக் காலனிகளுல் இவை குறிப்பிட்டு கூறத்தக்கவொன்றாக இருக்கிறதென்றே சொல்ல வேண்டும்-

ஏனென்றால், பல வீட்டுக் காலனிகள் காணாமலே போய் விட்டன. காண்டிராக்ட்காரர்களில் மோசடிகளில் உரியவர்கள் உரிய பலனை பெறாமல் மறுவாழ்வு மூலம் கிடைத்த வீட்டுக்கடன் - அதன் மூலம் ஒரு வீடு என்ற உரிமையை சலுகையை இழந்து வீடற்றோர்களாக நிற்கும் வேளையில் தமக்கென ஒரு வீடு என்று குடியிருப்பதும்-வாழ்வதுவும் ஒரு நிறைவையே அளிக்கிறது.

இந்த நிறைவில் பெரியசாமி அவர்கள் தெரிவிக்கும் கருத்து கசப்பாகவே இருக்கிறது. அப்படி இருக்குமாயின் அந்த கசப்புகளை அவர் களைய வேண்டுமென்பதுவும், அது மாதிரியான கசப்பான கருத்துகள் வராதவகையில் செயலாற்ற வேண்டுமென விரும்புகிறோம்.

- 'சஞ்சயன்'

"உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேராதியல்வது நாடு" -குறள்

மக்கள் மறுவாழ்வு

மலர் : 6 தை-ஜனவரி '88 இதழ் : 4

## மனிதாபிமானம் காட்டவேண்டும்

இலங்கை இந்திய அமைதி ஒப்பந்தம், இலங்கையில் இந்திய அமைதி படையின் நடவடிக்கையைத் தொடர்ந்து, இந்தியாவில் வந்திருக்கும் இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதில் இந்தியா நடவடிக்கை எடுத்து வருகிறது.

சமீபத்தில் மண்டப முகாமில் அகதிகள் நடவடிக்கை எடுத்த போது 'இலங்கை அனுப்புகிறார்கள் என்று அதிர்ச்சியாகி இருக்கிறார்கள்: பலர் செல்ல மறுத்திருக்கிறார்கள்'

இந்த சூழ்நிலைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் - இந்திய அரசு எண்ணிப்பார்க்க வேண்டும் - இப்படி விருப்பத்திற்கு மாறாக, பலாத்காரமாக திரும்பி அனுப்பப்படுகிறவர்கள் எம்மாதிரியான மனோநிலைப் பாதிப்பு ஆளாகிறார்கள்; கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள் என்பதை உணர்ந்துப் பார்க்க வேண்டும்.

இனக்கலவரங்களால் எல்லாம் இழந்து உயிர்தப்பினால் போதும் என்று வந்தவர்களே அதிகம். பலதரப்பட்ட சூழ்நிலைகளில் இங்கு வந்திருக்கிறார்கள். இவர்கள் பாதிப்புகுள்ளானவர்கள் - இனக்கலவரத்தின் - இராணுவத்தின் கொடுமைகளை கண் முன்னாலே பார்த்து அவற்றிக்கு ஆளாகி அனுபவித்து வந்தவர்கள்.

அப்படிப்பட்டவர்கள், அங்கு இன்னமும் பூர்ண அமைதி ஏற்பட்டு விட்டதா? போனால் உயிருக்கு என்ன உத்திரவாதம்என்று அச்சப்படுவதற்கு நியாயம் உண்டு. அதற்கு ஏற்றப்படி அங்கிருந்து வரும் செய்திகளும் இருக்கின்றன.

அதுமட்டுமல்ல; கடந்த காலத்தில் அமைதி ஏற்பட்டு விட்டது என்று திரும்பிச் சென்றவர்கள் மீண்டும் இங்கு திரும்பியதையும் நினைவு கூற கடமை பட்டிருக்கிறோம்.

இந்த சூழ்நிலையில், மனித உரிமைக்கும் - சர்வ தேச நியதிக்கும் மாறானது. அகதிகளை அவர்களது விருப்பத்திற்கு மாறாக அனுப்புவது.

இதுவரை எந்த நாட்டிலும் தஞ்சம் புகுந்த அகதிகள் முழுமையாக திரும்பிப் போனார்கள் என்ற சான்றுகள் இல்லை, இதில் இந்தியா வந்த பாகிஸ்தான், வங்க தேச, திபத்திய அகதிகளை கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்க வேண்டும்.

இலங்கை அகதிகளின் விருப்பத்திற்கு மாறாக அவர்களை திரும்பிச் செல்ல கெடுபிடிகள் செய்வது மனிதாபிமானதல்ல; அவர்கள் விரும்பும் வரை தஞ்சம் புகுந்த மண்ணில் தங்கி வாழ அனுமதிக்க வேண்டும்.

இந்தியாவுக்குள் தஞ்சம் புகுந்த அகதிகளில், இலங்கையிலிருந்து வந்த தமிழ அகதிகள் விசயத்தில் மனித உரிமை - சர்வ தேச நியதிக்கு முரணாக நடவடிக்கை எடுப்பதை விட்டு மனித நேயத்தோடு நடந்துக்கொள்ள வேண்டும். O

# மக்களைக்



எம். ஜி. ஆர் என்கிற மூன்று எழுத்துகள் லட்சோப லட்ச தமிழ் நெஞ்சங்களை விறு கொள்ள செய்கிற தாரக மந்திரம். தமிழ் நெஞ்சங்களை மட்டுமல்லாது ஜாதி, மதம், இன வேறுபாடுகளை கடந்து இளம் உள்ளங்களை ஈர்த்து நெகிழ வைத்த எழுத்துகளாகும்.

இந்த எழுத்துக்குரிய மாமனிதர் தமிழகத்தின் முதல் மந்திரியாக இருந்து மறைந்த எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களாவார் !

கடந்த 24-12-87 அன்று அதிகாலை மூன்று மணிக்கு ஆழ்ந்துயிலும் போது மாரடைப்பு ஏற்பட்டு இயற்கை எய்தினார் என்ற செய்தி இந்த லட்சோபலட்ச நெஞ்சங்களின் இதய துடிப்பை நின்று விடவே செய்தது.

வாழ்ந்தால் இவரைப்போல வாழவேண்டும் என்று சொல்லும் அளவிற்கு வாழ்ந்து விட்டு சென்றவர் 'தோன்றின் புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவரின் வாக்குக்கொப்ப வாழ்ந்து புகழோடு மறைந்தார்.

1917 ஆம் ஆண்டு ஜனவரி 17-ந் தேதி இலங்கையில் கண்டியில் பிறந்தார்.

நாடகத்தில் நடித்தார். திரையுலகில் கொடிகட்டிப் பறந்தார். 'புரட்சி நடிகர்' என்று புகழ் பாட திரைப்படங்களில் சாதனையை நிலை நாட்டினார்:

சிறந்த நடிகராகவும் திரைப்பட இயக்குனராகவும் தயாரிப்பாளராகவும் எம். ஜி. ஆர். விளங்கினார்.

அவர் கதாநாயகனாக எந்தப் படத்தில் நடித்தாலும், மது அருந்துவது, புகைபிடிப்பது போன்ற எந்த தீயப்பழக்கமும் கொண்டவராகவும் நடிப்பதில்லை. தீமைகளை சாடும் நல்லவனாக, எதையும் சாதிக்கும் வல்லவனாகவே நடித்து காட்டினார். அந்த கொள்கையே, லட்சியமே இவருக்கு பேரையும் புகழையும் தேடித் தந்தது.

20 ஆண்டு காலம், தமிழ் மாநிலத்தை ஆண்ட காங்கிரஸ் கட்சியை எதிர்த்து தி. மு. கழகம் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது என்றால் அதற்கு காரணம் இவரது பெரும் புகழும் கலந்த பணியே என்று புகழப் படுகிறார்.

1969 ஆண்டு அண்ணா மறைந்த பிறகு, தி.மு.கழகத்தின் பொருளாளராக இருந்தார். 1971-ம் ஆண்டு பொது தேர்தலுக்கு பிறகு தி.மு.க. வில் ஏற்பட்ட கருத்து வேறுபாடைத் தொடர்ந்த வெளியேற்றப்பட்டார்.

அடுத்த ஒரிரு மாதங்களில் 1972 அக்டோபரில் அவர் இதயக்கனி என்று தனக்கு பெயர் சூட்டிய அண்ணாவின் பெயரால் 'அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்' என்ற கட்சியைத் தொடங்கினார்.

இந்த கட்சி தமிழக அரசியலிலேயே ஒரு திருப்பு முனையாக இருந்தது. சில மாதங்களுக்குள்ளாக நடந்த திண்டுக்கல் தேர்தலில் வெற்றி பெற்றது. அடுத்த 1974'புதுவை மாநிலத்தில் நடந்த தேர்தலில் அதன் ஆட்சிப்பிடித்தது 1977 ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று தமிழ் நாட்டின் ஆட்சியை பிடித்தது.

1977 ஆண்டில் ஆட்சியைப்

# கவர்ந்த எம். ஜி. ஆர்.

பிடித்த எம். ஜி. ஆர். தனது இறுதிகாலம் வரை முதலமைச்சராக இருந்தார். இடையில் சிலகாலம் அவரது அமைச்சரவை டிஸ்மிஸ் செய்யப்பட்ட காலம் நீங்கலாக அவர் முதல்வராக இருந்து வந்தார்.

'இளமையில் வறுமை கொடிது' என்றார் ஔவை. அந்த கொடுமைக்கு ஆளாகி வறுமை என்றால் என்ன என்று உணர்ந்திருந்த எம். ஜி. ஆர். சமுதாயத்தில் - குறிப்பாக ஏழை எளிய மக்கள் மத்தியில் பல புரட்சிகரமான சீர்திருத்தங்கள் - திட்டங்களை செய்துக் காட்டியவர்.

'இளமையில் நானும், எனது சகோதரரும், எனது தாயாரும் பட்டினி கிடந்திருக்கிறோம். பசிக்கொடுமை என்னவென்று எனக்கு நன்கு தெரியும்' என்று குறிப்பிட்டுள்ள இவர் குழந்தைகளுக்கு சத்துணவு திட்டம், கருவுற்றத்தாய்மார்களுக்கு ஊட்டச் சத்துத் திட்டம், ஏழை குழந்தைகளுக்கு இலவச சீருடை-பாடப் புத்தகத்திட்டம், இலவசப் பல் பொடித் திட்டம் முதியவர் உதவித் தொகை போன்ற திட்டங்களைக் கொண்டு வந்து நடை முறைப்படுத்தினார்.

இவர் திரைப்படத்தில்நடித்து தெரிவித்த கருத்துகள் - நம்பிக்கைகள் தீர்க்க தரிசனமாக அமைந்தது போல ஆட்சிக்கு வந்தார் - முதல்வராகி வந்து அவற்றை செயல்படுத்தினார். என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் லட்சோபலட்ச மக்களை, ரசிகர்களை மட்டும் பெறவில்லை. தன்னை பின் தொடரும் தொண்டர்களாகவும் பெற்றார்.

'புரட்சித் தலைவர்' 'பொன் மனச் செம்மல்' 'மக்கள் திலகம்' என்று உலகமெங்கும் வாழும் தமிழ் மக்களால் அழைக்கப் பட்டு வந்த எம் ஜி. ஆர் சவாலையே சாதனையாக்கிக் கொண்டவர். நடிப்புத் துறையிலிருந்து அரசியல் துறைக்கு வந்து அதில் வெற்றி கண்டவர். கட்சி ஆரம்பித்த சில ஆண்டுகளிலேயே ஆட்சியையும் பிடித்து இந்தியாவின் கவனத்தையே ஈர்த்தவர்.

இவர் ஒருவருக்காகவே கட்சி; இவருக்காகவே தொண்டர்கள் என்று சொல்லும் அளவிற்கு அண்ணா திராவிட முன்னேற்ற கழகமே எம். ஜி. ஆர்., எம். ஜி. ஆரே அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் என்று அரசியல், பொது வாழ்வில் யாரும் செய்யாத சாதனையை-யாரும் பெறாத பேறை இவர் பெற்றார்.

'நான் செத்து பிழைத்தவன்டா' என்று ஒரு திரைப் படத்தில் பாடியிருக்கிறார். அதற்கொப்ப இவர் இருமுறை செத்துப்பிழைத்தவர்.


1967யில், மறைந்த நடிகர் எம். ஆர். ராதாவினால் சுடப்பட்டு பிழைத்துக் கொண்டார். 1984 ஆம் ஆண்டு ஆக்டோபரில் கடுமையான நோய்வாய்ப்பட்டு உயிர்பிழைக்க மாட்டார் என்ற நிலையில் பிழைத்துக் கொண்டார் - இரண்டு பிறவி எடுத்தவர் என்று மக்களும் பாராட்டினர்.

1932 யிலிருந்து 1964 வரை மேலவை உறுப்பினராக இருந்து 1967யில் முதல் முறையாக பறங்கிமலைத் தொகுதியிலிருந்து போட்டியிட்ட அவர் தொடர்ந்து மிக அதிகப்படியான வாக்குகளைப்பெற்று மூன்று முறை தமிழகத்தின் முதல்வரானார்.

அண்ணாவின் ஆட்சி காலத்தில் சிறு சேமிப்பு இயக்கத் துணைத் தலைவராகவும், கருணாநிதி ஆட்சிக் காலத்தில் மதுவிலக்கு ரத்தானபோது, மதுவிலக்கு பிரச்சார குழுத் தலைவராகவும், ஒன்றுபட்ட தி.மு.க. வின் பொருளாளராகவும் இருந்தார்.

1952 யிலிருந்து 1972 வரை தி.மு.க.வின் தீவிர அங்கத்தவராகவும் இருந்த அவர் 1972, அக்டோபரில் அக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதும் அண்ணா தி.மு.க, வைத் துவக்கி அதை அகில இந்திய கட்சியாகவும் மாற்றி முதல் அமைச்சர் பதவியையும், கட்சியை நடத்திச் செல்லும் பொறுப்பையும் கவனித்து வந்தார்.

நடிகராகவும், அரசியல்வாதியாகவும், அரசியல் தலைவராகவும் உயர்ந்து நின்ற எம்.ஜி.ஆர் கண்டியில் பிறந்து கடல்கடந்து வந்து வறுமையின் கொடுமையில் வாழ்ந்து உழைப்பால் வளர்ந்து 'வாழ்ந்தார் இவரைப் போல வாழவேண்டும்' என்று சொல்லிப் புகழ்ந்திட பேறு பெற்று நின்றார். அனைவரது நினைவுகளிலும் நிலைத்து விட்டார். ○



திருச்செங்கோடு கைலாஷ பாளையத்தில் தாயகம் திரும்பியோர்க்கு வீட்டு மனை பட்டா வழங்குகிறார் (பள்ளிப்பாளையத்தில் நடந்த கூட்டமொன்றில்)

## மகாராஷ்டிர அரசின்

# வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் நிறைவேற்றி எடுக்கப்பட்ட பணிகள் ஒரே மாதிரியான பணிகளானதால் சம்பந்தப்பட்ட திட்டபணிகளுடன் இணைக்கப்படுகின்றன. வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் பணிகளுக்காக செலவிடப்படும் தொகை ஆதாயமுள்ளதாக இருக்க வேண்டும் என்பதால் முறையான திட்ட பணிகளுக்கு தேவையான பயிற்சி பெறா உழைப்பை வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் செயல்படுத்தக் கூடிய பணிகளை ஒவ்வொரு துறையும் தெரிவிக்க வேண்டும். சிறு அளவிலும் பெரு அளவிலும் வாய்க்கால்கள் வெட்டுதல், நடுத்தர மற்றும் சிறு நீர்பாசனங்கள், சாலை வேலைகள், ஆயக்கட்டு வளர்ச்சி, காடு வளர்த்தல், தோட்டக்கலை ஆகிய பணிகள் சேர்ந்ததாகும்.

உழைப்பின் தரத்துக்கும் அளவுக்கும் ஏற்றவாறு வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் ஊதியம் வழங்கப்படுகிறது. அதாவது பணியாட்களுக்கு குறிப்பிட்ட வேலை அளவுக்குத் தக்கப்படி ஊதியம் வழங்கப்படுகிறது. திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் எல்லா விதமான வேலைகளுகேற்ப சீரான ஊதியவிகிதங்கள் அடங்கிய அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது

## ஊதியம்

சராசரியாக நாளொன்றுக்கு ஏழு மணி நேரம் வேலை செய்யும் சாதாரண உழைப்பாளி ஒருவர் பெறும் ஊதியம் மாநிலத்திலேயே குறைந்த பட்ச ஊதியம் பெறும் ஒரு விவசாய தொழிலாளி பெறும் ஊதியத்துக்கு சமமாக இருக்கும் வகையில் ஊதிய விகிதங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அளக்க முடியாத வேலைகளைப் பொறுத்தவரை குறைந்த பட்ச ஊதியம் பெறும் ஒரு விவசாய தொழிலாளி பெறும் ஊதியம், அதாவது தற்போது ஒரு நாளைக்கு ரூ. 6/- வீதத்தில் வழங்கப்படும். சமீபத்தில் பம்பாய் உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பின்படி ஒவ்வொரு மண்டலத்திலும் வித்தியாசமான ஊதியம் விவசாய தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதால் வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் வெவ்வேறு மண்டலங்களில் வழங்கப்படும் ஊதியத்திற்கு குறையாமல் இருக்க வேண்டும்.

உயர்நீதி மன்றத்தின் இந்த தீர்ப்பின்படி வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் வெவ்வேறு மண்டலங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வித்தியாசப்பட்ட ஊதியம் அளிக்கப்படுவதால் தொழிலாளர்கள் மத்தியில் ஒரு வேறுபாட்டை உருவாக்கியதுமன்றி சிக்கலான ஒரு சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளது. அதனால் வேலைவாய்ப்பு உறுதி திட்டத்திற்கு ஒரு பிரத்தியேகமான ஊதிய விகிதத்தையும் முறையையும் மாற்றி அமைப்பது அவசியமாகும். ஊதிய விகிதம் தொழிலாளர்களது அடிப்படை தேவைகள் அதாவது உணவு, இருப்பிடம், உடை, மருத்துவ வசதிகள், கல்வி, பிற தேவைகள் மற்றும் பண்டிகைக்கான தேவைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு நிர்ணயிக்கப்பட வேண்டும். கிராம பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களில் உள்ளவர்கள் சராசரி குடும்பங்களில் வசிப்பவர்களை விட அதிக மானவர்கள். எனவே வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் ஊதியம் குடும்பங்களில் வசிப்பவர்களின் எண்ணிக்கைக் கேற்ப நிர்ணயிக்கப்பட வேண்டும்.

## வேலைகள்

ஏற்கனவே விளக்கியபடி EGS வேலைகளுக்கு செய்த வேலை அளவுக்கு தக்கப்படி ஊதியம் வழங்கப்படுகிறது. மண்வெட்டுதல், பாறைகளை உடைத்தல், பொருட்களை தூர எடுத்துச் செல்லுதல், கல், மண், ஆகியவற்றை பரப்புதல் போன்ற பலதரப்பட்ட வேலைகள் நடைபெறுகின்றன. பலதரப்பட்ட அனைத்து வேலைகளுக்கான ஊதியத்தை அரசாங்கமே நிர்ணயித்துள்ளது. ஒரு நாளைக்கு ஏழு மணி நேரம் வேலை செய்யும் ஒரு வேலை ஆள் சராசரியாக ஒரு நாளைக்கு ஆறு ரூபாய் ஊதியம் பெறுமாறு **ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.** ஆயினும் ஒவ்வொரு வேலை ஆளும் ஆறு ரூபாய் ஊதியம் பெறுவதில்லை. அவரவர் முயற்சிக்கும் வேலைக்கும் தக்கவாறு சிலர் குறைவாகவும், சிலர் அதிகமாகவும் ஊதியம் பெறுகின்றனர். 1983-84ம் ஆண்டில் EGS திட்டத்தின் கீழ் பணி புரிந்த வேலை ஆட்கள் எவ்வளவு ஊதியம் பெற்றுள்ளார்கள் என்பது குறித்து ஒரு ஆய்வு குறிப்பு எடுக்கப்பட்டது. சுமாராக 86,760 பணியாட்களின் ஊதிய விகிதம் சோதிக்கப்பட்டதில் ஒரே ஒரு சதவீதம் வேலையாட்கள் 4 ரூபாய்க்கு குறைவாக ஊதியம் பெற்றுள்ளார் என்ற விவரம் தெரிந்துக் கொள்ளப்பட்டது.

## தமிழகத்திலும் அமுலாக்க வேண்டும்

இந்திய பொருளாதாரம் கிராமத்தில்தான் தங்கியுள்ளது. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னால் கிராமப்புற மக்கள் பொருளாதாரத்தில் சுதந்திரம் அடைய வேண்டும் என்று சொன்னார் அண்ணல் காந்தி ஆனால் சுதந்திரத்திற்கு பின் கடந்த 7-வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் கோடான கோடி ரூபாயை அரசு அள்ளி இறைத்தும் கிராமப்புறங்களில் எதிர்பார்த்த அளவு பொருளாதார மாற்றம் ஏற்படவில்லை.

இவ்வேளையில் மகாராஷ்டிரா மாநிலம் கொண்டு வந்துள்ள வேலை உத்தரவாதச் சட்டம் அம்மாநில கிராம மக்கள் இடையே குறிப்பிடத்தக்க சமூக பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது என்பது புலனாகிறது

மத்திய அரசின் 20 அம்ச திட்டத்திலுள்ள NREH, RLEGP HADP. TRYSEM போன்ற திட்டங்களில் கிடைக்கும் பணத்தை திரட்டி, பற்றாக்குறையை வேறு துறைகள் மூலம் வரியாக பெற்று மாநில அரசு இந்த திட்டத்தை நிறைவேற்ற முடியும்.

தமிழகத்தில் மட்டும் அல்ல, இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலங்களிலும் மகாராஷ்டிரா மாநில வேலை உத்தரவாத சட்டத்தை அமுலாக்கினால் கிராமப்புற மக்கள் ஓரளவிற்காவது பொருளாதார சுதந்திரம் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

தனி ஒரு இயக்கம், தனி ஒரு நபர் இத்திட்டத்தை சட்டப்பூர்வமாக நம் மாநிலத்தில் கொண்டுவர முயற்சி எடுக்க முடியாது எனவே, கிராமப்புற மக்கள் நல் வாழ்வில் அக்கறை கொண்டுள்ள அத்தனை பேரும் இம் முயற்சியில் இறங்க வேண்டும்.

- என். கே. பி.


### மக்கள் மறுவாழ்வு சந்தா விபரம்

**தனிப்பிரதி 75 காசுகள்**
**வருட சந்தா ரூ. 10-00**

விபரங்களுக்கு :

**மக்கள் மறுவாழ்வு**
**சென்னை 600 094.**

மாதிரி பிரதி வேண்டுவோர் ரூ. 1-க்கு அஞ்சல் தலை அனுப்பவும்

## ஒரு விமர்சனம்

# அடிமைத்துவம் வேரோடும் மண்ணில்..

**Where Serfdom Thrives**

The Plantation Tamils of Sri Lanka

by Mayan Vije

Tamil Imformation & Research unit, Madras, 1987; pp 110

**எஸ் இராமசாமி**

இலங்கையில் மலையகத் தோட்டத் தொழிலாளரது நிலைமை குறித்த ஆய்வுகளுக்கு அவசர - அவசியத் தேவை நிலவும் இன்றைய சூழலில் திரு. மயன் விஜே ஆங்கிலத்தில் எழுதியுள்ள இந்த நூல் ஒரு கல்லூரி மாணவன் அவசரக் 'கோலத்தில்' அள்ளித் தெளித்த கட்டுரையின் முதல் வரைவாகவே (first draft)தோற்றம்தருகிறது.

மலையத் தொழிலாளர்களின் சுருக்க வரலாறு, பிரஜா வுரிமைப்பிரச்சினை, கல்வி, சம்பளம் வீட்டு, சுகாதார வசதிகள் தோட்டத் தொழிலாளார்களுக்கு எதிரான வன்முறை, தோட்டத் தொழிலாளர்களின் எதிர்காலம் என்று ஏழு அத்தியாயங்களில் மலையகமக்களின் பிரச்சினைகளை ஆராய முயன்றிருக்கிறார்.

நூலின் மூன்றில் ஒரு பகுதியை ''பிரஜாவுரிமை'' என்ற 2வது அத்தியாயம் எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த அத்தியாயமே இந்த நூலில் சிறப்பாக எழுதப்பட்டுள்ள பகுதியாகும். ''தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான வன்முறை'' என்ற 6வது அத்தியாயத்தையும் சிரத்தையோடு செய்திருக்கிருர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 1987 மார்ச் மாதத்தில் கண்டியில் 43வது வருடாந்த மாநாட்டுத் தீர்மானம் நிறைவேற்றும் வரை தோட்டத்தொழிலாளர் மீதான வன்முறைத் தாக்குதலை ஒழுங்கு முறையாகத் தொகுத்துத் தந்திருக்கிருர்

கண்டி, நுவரெலியா, மாத்தளை, பதுளை, கேகாலை, களுத்துறை, இரத்தினபுரி, மொனறாகலை போன்ற மாவட்டங்களைக் கணக்கில் எடுத்து, மலையகத் தமிழருக்கான தனி மாவட்டத்தை வரையறுப்பது பற்றி மயன் விஜே தெரிவித்துள்ள கருத்து சிந்தனைக்குரியதாகும்.

ஆக, மலையகத் தொழிலாளர் பற்றிய ஒரு இ. தொ. கா. பார்வை இது. ஒரு தொழிற்சங்க வரம்பை மீறி இவரால் மலையகப்பிரச்சினையை தரிசிக்க முடியவில்லை

தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டங்களின் சாராம்சங்களையும் வட, கிழக்கில் தமிழர்கள் நடத்தும் ஆயுதப் போராட்டத்தின் தாக்கம் மலையகத்தில் எதிரொலித்திருப்பதையும் தொண்டமானின் தலைமைக்கு அப்பால் மலையகத்தமிழர்களின் கிளர்ச்சி வேர் பிடித்திருப்பதையும் நூலாசிரியர் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை.

இ. தொ. கா. மாநாட்டில் தீர்மானங்களிலும் ஆண்டறிக்கைகளிலுமே மலையகமக்களின் பிரச்சினைகளுக்கான நிவாரணங்களில் மயன் விஜே தேடிக் கொண்டிருக்கும் வேலை வியர்த்தமானது

∴ 1986ஜனவரியில் நாடற்ற மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்க இலங்கை அரசு முன் வந்தமைக்கு இ. தொ. க. 1986 ஜனவரியில் ''பிரார்த்தனை'' மேற்கொண்டது தான் என்று மயன் விஜே உண்மையில் நம்புவாராயிருந்தால் அவர் இந்தப் புஸ்தகம் எழுதும் வேலையை விட்டு விட்டு வேறுவேலை பார்ப்பது சமூகநலன் சார்ந்த விவகாரமாகும் வட, கிழக்கில் இரத்த வெள்ளம் பெருகி ஓடுவதை-மண்டை ஓடுகள் குவிவதை யாழ்ப்பாணம் மயானபூமியாய் மாறுவதை அனுமதித்த ஜெயவர்த்தன - இந்திய அரசாங்கம் இலங்கையைக் கைப்பற்ற வேண்டுமானால் 24 மணி நேரத்திற்குள் அதனைச்செய்து முடித்து, என்னையும் கைது செய்யலாம். அப்படி நடக்குமானால் சிங்களவர் மத்தியில் வாழும் சகல தமிழர்களும் காலியாகி விடுவார்கள்'' என்று எச்சரிக்கை விடுத்த ஜெயவர்த்தனா இ. தொ. கா. வின் பிரார்த்தனை இயக்கத்திற்கு மசிந்து விட்டார் என்று எப்படி இவரால் நம்பமுடிகிறது? Dear Vija, Do you seriously belive this? புரியவில்லை.

ICFTU, WFTU, IFPAAW போன்ற சர்வதேசத் தொழிற் சங்கங்களுடன் இலங்கையின் தோட்டத் தொழிற்சங்கங்கள் இணைந்திருப்பதன் காரணமாக மலையகத்தமிழரின் பிரச்சினைகளை சர்வதேசமயப்படுத்துவது லேசானது என்கிறார் நூலாசிரியர் 40 ஆண்டு காலமாக இ. தொ. கா. போன்ற தொழிற்சங்கங்கள் இந்த சர்வதேச ஸ்தாபனங்களில் அங்கம் வைத்துக் கொண்டுதானே வந்திருக்கின்றன. சௌமிய மூர்த்திகளுக்கும் அசீஸ்களுக்கும் தெரியாததா? 1974ல் மாதச் சம்பளம் கோரி பெரும் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துவிட்டு, சில தினங்களுக்குப் பின்னர் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் வேலை நிறுத்தத்தில் சேர்ந்துவிட்டது என்பதற்காக, கோரிக்கைகள் எதுவுமே நிறைவேற்றப்படாத நிலையில் இ. தொ.கா. தனது வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றதை நூலாசிரியரே தான் ஆரம்பத்திலேயே நினைவு படுத்தியுருக்கிறார்! இத்தகு தலைவர்களின் வழிகாட்டலில் மலையகத் தமிழர்களின் தலைவிதி நிர்ணயமாவது என்பது தான் எவ்வளவு துக்ககரமானது ?

இனி, இந்த நூலாக்கம் பற்றிச் சில குறிப்புகள் :

போதிய ஆய்வு நெறிப்பயிற்சியின்றி இத்தகைய நூலை எழுத முனைவதில் உள்ள குறைபாடுகள் நூலின் முதல் அத்தியாயத்தைப் புரட்டியதுமே முகத்தில் அடிக்கிறது. 1830 களில் தலைமன்னாரிலிருந்து கண்டிவரையுள்ள 150 மைல் தூரத்தை தோட்டத் தொழிலாளர் நடந்து போய் பட்ட அவலத்தை எச். பி. சட்டோபாத்யாயவினை மேற்கோள் காட்டி விபரிக்கிறார். இது ஒரு இரண்டாம் நிலைப்பட்ட ஆதாரமே. (Secondary Source). தோட்டத் தொழிலாளர்களைத் திரட்டும் துண்டு முறையின் கொடுமையை விபரிக்க G. A. ஞானமுத்துவை மேற்கோள் காட்டுகிறார். இதுவும் இரண்டாம் நிலைப்பட்ட ஆதாரமே. துண்டு முறையின் கொடுமையை ஆதாரபூர்வமாக விபரிக்கும் மெஜோரிபேங்ஸ் - மரக்காயர் குழுவின் 1917ம் ஆண்டின் அறிக்கை மட்டுமே இது குறித்த அடிப்படையான சான்றாதாரமாகும். இந்த நூலாசிரியர் உண்மையில் மேற்கோள் காட்டுவதைத் தவிர்த்து விட்டு, இந்த விஷயங்களைத் தான் வாசித்து, கிரகித்துக் கொண்ட அளவில் ஆசிரியன் வாயிலாகவே வெளியிட்டிருக்கலாம், இந்த மேற்கோள் சிலுவைகள் அவசியமேயில்லை.

மேலும், இந்த நூலை Edit பண்ணுவதில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. உதாரணமாக, 1964ம் ஆண்டு. ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தை மட்டும் விவரித்து விட்டு (பக் 24) அந்த ஒப்பந்தத்துடன் 1974ம் ஆண்டு ஒப்பந்தத்தையும் பற்றிய விமர்சனத்தை, தாயகம் திரும்பியோர் தொழிலாளர் ஐக்கிய முன்னணி அறிக்கையிலிருந்து

(12-ம் பக்கம் பார்க்க)

## அடிமைத்துவம் வேரோடும் மண்ணில்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கோள் காட்டுகிறார். (பக். 25) 1974ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் என்ன என்பதைப்பற்றி பிறகு தான் விபரிக்கிறார். (பக். 27) இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இன்றுமொரு நிழலான தாயகம் திரும்பியோர் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் அறிக்கையை (1984) தனது நூலில் எங்காவது மேற்கோள் காட்ட மயன் விஜே விரும்புவதை நாம் குறை சொல்லவில்லை. சம்பந்தப்பட்ட மக்களின் தலைவிதியைப் பற்றி எந்தவிதமான அக்கறையும் செலுத்தாமல், இந்த இரண்டு நாடுகளும் தமக்கிடையில் எவ்வளவு பேரை எடுத்துக் கொள்வது, எவ்வளவு பேரைத் தள்ளி விடுவது என்று கணக்குப்பிரிப்பதில்தான் முக்கிய கவனம் செலுத்தியுள்ளனர் என்பது இந்த ஒப்பந்தங்களில் இருந்து புலனாகின்றது'' என்பது தாயகம் திரும்பியோர் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் 1964, 1974 ஒப்பந்தங்கள் பற்றிய விமர்சனக் குறிப்பு.

1964ம் ஆண்டு ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் மேற் கொள்ளப்பட்ட மறு கணத்திலேயே இந்த ஒப்பந்தங்கள் சம்பந்தப்பட்ட மக்களைக் கணக்கில் எடுக்கவில்லை என்றும் வெறும் எண்ணிக்கை விளையாட்டு என்றும் கருத்துகள் மிகப்பரவலாக முன் வைக்கப்பட்டன 1964ம் ஆண்டு ஒப்பந்தம் பற்றிய இந்த அபிப்பிராயத்தைப் பெற்றுக் கொள்ள தாயகம் திரும்பியோர் தொழிலாளர் ஐக்கிய முன்னணி 1986ல் ஆண்டு அறிக்கை வெளியிடும் வரை - அதாவது 24 ஆண்டுகள் மயன் விஜே காத்திருக்க வேண்டியதில்லை.

நூலின் இறுதியில் 5 இலங்கைப்புற உருவப்படங்களை இணைத்திருக்கிறார்கள். இலங்கை மாகாணங்களைக் காட்ட ஒரு படம், மாவட்டங்களைக் காட்ட ஒரு படம், இலங்கையின் மத்திய மலைநாட்டைக் காட்ட ஒரு படம் என்று படங்களைப் போட்டு நிரப்பப் பார்த்த மாதிரி தெரிகிறது.

சி. வி. வேலுப்பிள்ளையின் கவிதையிலிருந்து பொருத்தமான வரிகளை எடுத்து - ''Where Serfdom Thrives'' என்று நூலுக்கு தலைப்பிட்டிருப்பது சிறப்பாயுள்ளது. மிகவும் கவனம் எடுத்து, நேர்த்தியாக அச்சிட்டுள்ளமை பாராட்டத்தக்கது. O

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஆசிரியருக்கு சிறு குறிப்பு

1. தொழிலாளப் பயிற்சியாளரிடம் தோழமையோடு இருங்கள்; அவர்களுக்குக் கற்பிக்கும் போது அவர்களிடமிருந்து கற்று கொள்ளும் போக்கினையும் மேற்கொள்ளுங்கள்.

2. அவர்களுடைய இன்னல்களையும் இடையூறுகளையும் அறிந்து கொள்ளுங்கள் - வகுப்பு அறைக்கு வெளியேயும் தொழிலாளப் பயிற்சியாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

3. உங்களிடம் தவறுகளோ, குறைபாடுகளோ எவையேனும் இருந்தால் அவற்றை ஒப்புக் கொள்ளத் தயாராய் இருங்கள். உங்களையும் பயிற்சியாளர்களில் ஒருவராகக் கருதுங்கள்

4. பயிற்சியாளர்களுக்கு ஆர்வம் ஊட்ட உங்களுடைய சொல் நயத்தையும், நகைச்சுவை உணர்வையும் பயன் படுத்துங்கள்.

5. பயிற்சியாளரிடம் இருந்து பதில் வரவில்லை என்றால் நம்பிக்கையை இழந்த நிலையில் கையைப் பிசையாதீர்கள். அவர்களிடம் ஆர்வத்தை ஏற்படுத்துவது உங்களுடைய பொறுப்பு ஆகும்.

6. பெரிதும் பொறுமை வேண்டும். உங்களுடைய வேலையில் நம்பிக்கை இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக உங்களிடம் பயிற்சி பெறுவோரிடம் அன்பை வளர்க்க வேண்டும்.

[தமிழாக்கம்: கோ.வேணு கோபால்சாமி, எம்.ஏ., தொழிலாளர் தலக் கல்வி பிரசுரம் ஒன்றிலிருந்து.]

---

## எங்கள் பொங்கல்

**அருள் அன்டணி**

அன்று பச்சரிசிபானையிலே பொங்கக் கண்டேன்
இன்று பச்சைக் குழந்தைகள் அதில் வேகக்கண்டேன்
அன்று மாக்கோலம் வாசலிலே போடக்கண்டேன்
இன்று பிணக்கோலம் போடுகின்ற கணவர் கண்டேன்
அன்று கரும்புண்டு சிறுவர்கள் சிரிக்கக் கண்டேன்
இன்று இரும்பினால் அடிப்பட்டு இறக்கக் கண்டேன்
அன்று பட்டாசு வானவேடிக்கைக் கண்டேன்
இன்று துப்பாக்கியுடன் வெடிக்குண்டும் கண்டேன்
அன்று அமுத சிரிப்பில் அழகு கண்டேன்
இன்று அழுகுரல் ஓயாதிருக்கக் கண்டேன்
அன்று உறவுகள் ஒன்று கூடக் கண்டேன்
இன்று அகதியாய் அவர்கள் மாறக் கண்டேன்
அன்று தைப்பொங்கல் நாளில் இன்பங் கண்டேன்
இன்று தமிழ் விடுதலை காண விழிப்பு கொண்டேன்

(1985யில் இலங்கை அகதிகள் நலம்புரி அமைப்பின் சிறப்பு மலரில் (தட்டச்சி இதழ்) வெளியிடப் பட்ட கவிதை)

---

## சிரிப்பும் சிலையும்!

**எஸ். பன்னீர்செல்வம்**

**அவன்**

சுண்டாங்கி ஊசையலே
செதிலடிக்கும் கெண்டை மீனே!
கண்டாங்கி சேலைகட்டி
கருதறுக்கப் போற புள்ளே!

அருகம்புல் மேனியிலும்
அணி(ல்) வாலு கொண்டையிலும்
சிரிக்கும் சிலையழக
செதுக்கியது யாருபுள்ளே ?

**அவள் :**

கொத்தவரை மேனிக்கொரு
கருதறுவா மீசை வச்சு
கடைத்தெருவு போற மச்சான்
கண்ணடிப்ப தென்ன முறை ?

பெண்ணுக்குப் பேரழகு
பருவம் வந்தா தேடி வரும்
என் மேலே ஆசையின்னா
ஆத்தாக்கிட்டே வந்து கேளு !

# தேயிலை நாத்து

## சிறுகதை

''என்னா....பயமா இருக்கா?' -குரல் வந்த திசையில் அவன் பார்வை சென்றது. எங்கும் வேலை செய்பவர்களின் பேச்சு இனிமையாக ஒலிக்கும் அந்தக்குரல் பழக்கமானது தான். ரங்கராஜுவின் கண்கள் அலை மோதின....

''ஓ.. நீயும் இங்கேதான் இருக்கயா...? '' ஆர்வமுடன் துறுதுறுக்கும் கண்களை அவள் மீது நிறுத்தி ரங்கராஜு கேட்டான். அவளுடைய பார்வையும், அவன் மீது ஆழப்பதிந்திருந்தது.

''எனக்குத் தெரியும். மாமா சொல்லிட்டாங்க. நீங்க இன்னைக்கு வேலைக்கு வரப் போறீங்கன்னு...'' அவள் உற்சாக மிகுதியால் பாய்ந்து மண் குவியலைத் தாண்டிக் கொண்டு, அவனருகில் வந்து சேர்ந்தாள்.

ரங்கராஜுவின் அப்பா துரைராஜுதான், இந்த 'நர்ஸரிபாம்' கங்காணி. டீ எஸ்டேட்டுக்குத் தேவையான புதிய நாற்றுகள், இவரால்தான் வளர்க்கப்படுகிறது. மணமும், ருஷியுமிகுந்த தேயிலைச் செடிகளிலிருந்து, கிளைகளை வெட்டி எடுத்து இங்கு பதியம் போட்டு வளர்க்கப்படுகிறது. கிளைகள் பதியங்களில் வேர்பிடித்து, துளிர் விட்டு, இலைகள் வளர்ந்து-செடிகள் வளர ஆரம்பித்தவுடன், காடுகள் வெட்டி அழிக்கப்பட்டு துப்புரவாக்கப்பட்டுள்ள மலைச்சரிவுகளில் மழைக்கால ஆரம்பத்தின் போது, பெயர்த்து நட ஆரம்பித்து விடுகிறார்கள். அது வரைக்கும் டீ நாற்றுகளை பதியங்களில் கவனித்துக் கொள்வது, துரைராஜுதான்.

''வேலை, ரொம்ப கஷ்டமாக இருக்கு இல்ல?''

''இல்லை'' என்றாள் அவள். ''நானும் நேற்றுத்தேன் வேலைக்கு வந்தேன். வயிறுன்னு இருக்கும்போது உங்கலை மாதிரி கஷ்டம்னு பேச எனக்கு வரலே...''

''வயிறு இருக்கு. அதற்குன்னு உண்மையை சொல்லக் கூடாது- அப்படியா? இது ரொம்ப நல்ல விசயம். சொன்னவங்களாலே கூட இப்படி நடந்துகிற முடியாது.''

''அப்பாவுக்கு ரொம்ப முடியலே. அவரு இனி எழுந்திரிச்சு வேலை செய்ய முடியாது. இந்த மலைச்சாரலிலேயும், குளிரிலேயும் அவர் இனிமே நடமாடக் கூட முடியாது; படுத்த படுக்கையாயிட்டார். அம்மா மட்டும் உழைச்சு. . வருமானம் படுத்துரிச்சு. தம்பி தங்கை



பி. எஸ். நாதன்

எல்லாத்தையும், பாக்கணும் அதனாலே, நானும் வேலைக்குப் போறது நல்லம்னு - இந்த நிலைமையிலே, கஷ்டம்னு சொல்லிக்க முடியுமா ?'' அவள் விபரத்தை தாழ்ந்த குரலில் சொல்லும்போது, துயரம் இழைந்தது.

''உனக்கு மட்டும் எப்படி மானேஜர் உடனே வேலை கொடுத்தார் ? இன்னும் எத்தனையோ பேருக்கு' மூனு மாசம் நாலுமாசம் முன்னாலேயே வேலைகேட்டுப் பதிவு செஞ்சும், இன்னும் வேலை கிடைக்கலே. நான், உன்னைய வச்சு சண்டைப் போட்ட பிறகுதான், எனக்கு இன்னைக்கு வேலையே கடைச்சது.''

''நிஜமாவா, எப்படி?''

''எப்படியா? அழகான பொண்ணு; நீ போய் வேலை கேட்டிருக்கே.. உடனே அடுத்த நாள் வேலை ! மானேஜரின் யோக்கியத்தை இதிலே புரிஞ்சுக்க வேண்டாமா, நீ ?''

அவள் பிரமிப்படைந்து நின்று விட்டாள். சற்று நிதானம் அடைந்து மெதுவாக, கலங்கிய குரலில் அவள் சொன்னாள். ''நான் தவறான வழியில் வேலை வாங்கிட்டேன்னு, நினைக்கிறீங்களா ?''

''இல்லை ! நான் அப்படி நினைக்கல்ல ! தவறான நிலைமையை உண்டாக்கும்னு நினைக்கிறேன். அவ்வளவு தான்!''

கங்காணியார், வந்து அவர்களைப்பார்த்தார். அவர்களின் வேலை அவ்வளவு நயமாகத் தெரியவில்லை. 'மண்சலிக்கப்பட்டது குறைவு' என்றார். இன்னும் ஏதேதோ குறைகள் சொன்னார். அப்பனும் பின்னையுமாக இருந்தாலும் 'வேலை சுத்தம் வேண்டும்' என்பதில் கண்டிப்பானவர்.

கங்காணியார் போனபிறகு ரங்கராஜு வெறுப்புடன் நின்றான். இன்று அவன் மண்ணை வெட்டி குவித்தான். ஜெகஜோதியும் அவனுடன் கலந்து கொண்டாள். அவர்களுக்கு இது புதிய அனுபவம். உடல் வேதனையாக இருந்தது. கை விரல்களின் ஓரங்களும், உள்ளங்கைகளிலும் எரிச்சல் கண்டது. மூட்டுக்கள் வலித்தன. கைகால்கள் சோர்வடைந்தன. அவர்களைவிட சிறியவர்களும் பெரியவர்களும் ஆண்களும், பெண்களும் எவ்வளவு சுறுசுறுப்பாக, தங்களின் வேலைகளை செய்துக் கொண்டிருக்கிறார்கள் ?

மண் வெட்டுவது... சல்லடையில் சலிப்பது. . அள்ளிச் செல்வது, சிறிய சிறிய இருபக்கமும் ஓட்டையுள்ள நைலான் பாக்கெட்டுகளில் கீழே நழுவி கொட்டிவிடாமல் மண்ணை திரப்பி கெட்டிப்படுத்தி வைப்பது - கைகள் எவ்வளவு வேகமாக இயங்குகின்றன ? சின்னச் சின்ன யந்திரங்களைப் போல, அந்தக் கைகள் இயங்குகின்றன ?

அவர்களுக்கு அவர்களின் வேகத்தைப் பார்க்கும் போது ஆச்சரியத்தை உண்டாக்கின. வேலைகள் மலைப்பை உண்டாக்கின.

ஜெகஜோதி மலைப்பிலிருந்து தன்னைசுதாகரித்துக் கொண்டு சொன்னாள். ''இதோ, பாருங்க ..! மீசை முளைச்ச ஆம்பளை நீங்க ! ஏன் இப்படி மலைக்கனும் ? வேலை செய்தா என்ன, கொறஞ்சா போயிடும் ? ''

''நான் புதிசுதானே.. இன்னைக்குத்தானே வேலைக்கு வந்தேன்.''

''இதைப் பாருங்க. உங்க மாதிரி யோசனை பண்ணிக்கிட்டு வேலை பாக்க முடியாது. இதைப் போயி எங்கேயும் கத்துக்கிட்டு வரமுடியாது. இங்கே தான் வேலை செய்து கத்துக்கனும் !''

அவள் நிமிட நேரங்களுக்குள் நைலான் பாக்கட்டுகளை உருவி மண்ணைத் திணித்து.. ஒன்று ...இரண்டு....மூன்று....

அவன் கூட அந்த யந்திரகை வாகைக் கற்றுக் கொண்டு விட்டாள். ரங்கராஜுக்கு; ஒரு உற்சாகமான மன நிலை உண்டாகியது. ''கைவெரசாத்தான் நீயும், ஆரம்பித்து விட்டாய் ! எப்படி பழகிக் கொண்டாய் ?''

''மனம் வச்சுட்டா, எதுவும் பழகிக்கிறது ரொம்ப சுலபம் ! ஆமா ! முதல்ல மனசுல உறுதி வேணும்; 'நான் இந்த வேலைய செய்யப் போறேன் கிற.' உறுதி மனசுல உண்டாயிரிச்சினா வேலையும் பாதிமுடிஞ்சுடும் நீங்க ஏதோ அதிருப்தியோட இந்தவேலைல ஈடுபடுறீங்க..! வேலை செய்யிரதில வெட்கப் படக் கூடாது.'

''ஜெகஜோதி எங்க அப்பா வாராரு !'' என்றான் ரெங்கராஜு மெல்லிய குரலில்

(14-ம் பக்கம் பார்க்க)

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

அவள் திரும்பிப் பார்த்து விட்டு, வரட்டுமே..., நான் கேட்கிறேன். 'வீட்டிலவச்சு சோறு போட முடியாமே, வேலைக்கு அனுப்பி வச்சிட்டீங்களான்னு' என்றாள். அவளின் விழிகள் குறும்புத்தனமாக அவன் மீது சுத்தியது.

கங்காணியார் மீண்டும் வேலை நிலைமைகளை கவனித்துக் கொண்டு வந்தார். ஜெகஜோதி சொன்னபடியே அவரருகில் சென்று கேட்டாள். பிறகு சிரித்துக் கொண்டே ''மாமா நான் வேணும்னா சோறுபோடுரேன். எங்க வீட்டுக்கு அனுப்புங்க!''

''அது வம்பா போயிடும்மா;''

''போங்க மாமா''

கங்காணியார் ஏதோ சொல்ல திருப்பினர். அவர் கண்களில் பள்ளத்திலிருந்து மேலேறிவரும் புகைச்சுருள் பட்டுவிட்டது. சின்னவன் என்கின்ற பத்து வயதுப் பையன், காற்றை சுவாசிக்கும் போதே புகையிலைத் தூள் வாசனையை கண்டு பிடித்து விட்டான். உடனே ''கங்காணியாரே, கூனி மானேஜர் வரார்'' என்றான்.

ரங்கராஜுக்கு இது பெரும் ஆச்சரியமாக இருந்தது. கண்ணுக்குத் தோன்றாமல் பள்ளத்தாக்கிலிருந்து ஏறிவந்து கொண்டிருக்கும் பீல்டு மானேஜர். ஜானைப்பற்றி சிகரட் வாசனையை நுகர்ந்தே சொல்லிவிட்டதைப் பார்த்து வியப்படைந்தான்''தம்பி'' என்று கூப்பிட்டு கங்காணியார் சொன்னார்! ''அவனுக்கு வயது கொஞ்சம் தான். பீடி, சுருட்டு, போயிலை எல்லாம் அத்துப்படி.... தனித் தனியா இது பீடி, இது சுருட்டு, இது சிகரெட்டுன்னு மோப்பம் பிடிச்சே சொல்லிடுவான்.'' மேலும் அவர் தொடர்ந்து சொன்னார். ''எல்லோரையும் பேர் சொல்லித்தான் கூப்பிடுவான். யாரையாவது 'அண்ணே'ன்னு கூப்பிட்டா அதுக்கு ரெட்டை அர்த்தம்; 'டேதம்பி'ங்கிறது அதில் ஒரு அர்த்தம்... கிண்டல் பேர்வழி!''

''தம்பி.. நிறைய பீடி சிகரெட்டு குடிப்பியா அப்பா?'' ஜெகஜோதியின் இந்தக் கேள்விக்கு, ''சிகரெட்டு பணம் கிடைப்பதில்லை அக்கா!'' ரொம்ப தமாஷாகவே அவனுடையப் பதிலைச் சொன்னான்.

மானேஜர் ஜான் குடித்திருந்தார். அவருடைய கண்களில் சிவந்து தெரிந்தது. அவர் வந்த போது வேலை செய்பவர்களின் இரைச்சல் நின்றுவிட்டது; இவ்வளவு அமைதியுடன் வேலை செய்ய முடியுமா, மற்றநேரங்களில் என்பது அவர்களுக்கே சந்தேகம்!

மானேஜரின் வாயிலிருந்து புகை குட்குப்பென்று வெளிவந்தது கண்கள் உப்பிப்போயிருந்தன. கையில் ஒரு கைத்தடி, நீண்டு வளைவுடன் அவர் கையில் விளையாடியது. பல பேர் சேர்ந்து வேலை செய்யும் இம்மாதிரியான இடங்களில், சற்றுமுன் நிலவிய இரைச்சல் அடங்கிப் போய் அமைதி அடைவதற்கு காரணம் என்ன என்பதுபற்றி ரங்கராஜு சிந்தனை செலுத்தினான். ஜெகஜோதிக்கு இம்மாதிரியான நிலைமை புரியவில்லை; அவள் முகத்தில் குழப்பம் நிலவியது 'தினசரி நிலைமை இப்படித் தான் இருக்கும்' என்பது அவளுக்குத் தெரியாது.

மானேஜர் ஜான் நேராக கைத்தடியை தரையில் தட்டிக் கொண்டு ரங்கராஜும் ஜெகஜோதியும் நிற்கும் இடத்திற்கு வந்தார் அவர் நடையில மிடுக்கு இருந்தது. அவர் கண்கள் சிவப்பாக உப்பித் தெரிந்தாலும், கோபக்கனல் வீசுவதாகத் தோன்றவில்லை, அவர்களின் நெஞ்சுக்குள் வலி போன்ற உணர்வு மேலோங்கியது. முகத்தில் அவசரமாக வேலை செய்யும் உணர்வுகளைத் தேக்கிக் கொண்டு, வேறு எவ்வித சலனம் காட்டாது மண்ணை அள்ளி பாக்கட்டுகளில் நிரப்பினார்கள்.

மானேஜர் ஜான் பாக்கட் பாத்திகளிலிருந்து ஒதுங்கி நடைபாதையில் மூன்று பாக்கட்டுகள் இருப்பதை கவனித்தார். அவரின் சுழலும் கைத்தடி அந்தப் பாக்கட்டுகளில் விளையாண்டு, கீழே தட்டிவிட்டன. யாரோ அதை கவனமின்மையால் வீசியெறிந்துள்ளதாக அவருக்குப் பட்டது.

''ஏய் கங்காணி!'. என்று கத்தினார்.

கங்காணி மூச்சிரைக்க ஓடி ஓடிவந்து தலையை சொரிந்து கொண்டு 'என்னக்க சார்' என றார் குரலில் பயம், அமுங்கலாக வெளிவந்தது. உடல் குறுகி போயிருந்தது.

ஒருவரும்பேசவில்லை. மூச்சு கூட யாரும் விடவில்லை வேலைத்தளம் இவ்வளவு அமைதியாக இருக்குமா என தோன்றுகிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு இது பயங்கர அமைதி!

''பாக்கட்டுகளை வீசிப் போட்டது யார்?'' உக்கிரமான அவருடைய குரலில், கனல் தெறித்தது. அந்தக் உக்கிரம் தான் அவரின் கடமையை, அவரது பதவியின் பொறுப்புணர்வை காட்டுகிறது போலும். தனது பதவிகாலத்தில் எந்த தவறையும் அனுமதிக்க இவர் இடம் கொடுத்ததில்லையாம் பல லட்சக் கணக்கான ரூபாய் முதலீட்டில் நடக்கும் எஸ்டேட், பாக்டரி, குவார்ட்டர்ஸ், வேலை செய்யும் ஆட்கள் மீது, மானேஜராக நியமனம் பெற்றதிலிருந்தே ஒரு கடுமையான நிர்வாகத்தை கொண்டு நடத்துபவர்.

இவர் தவறு செய்பவரை கண்டு பிடித்தாக வேண்டும். இது இவரின் பொறுப்பு அத்துடன் தண்டனை கொடுத்தாக வேண்டும். ரிப்போர்ட் எழுத வேண்டும். ஒழுங்கீனமான வேலை ஆட்களை வேலையிலிருந்து நீக்க வேண்டும். எதற்கும் ஒரு சரியான காரணம் இல்லாமல், காரியத்தை செய்ய முடியாது இவரால்!

இவர் ஆழ்ந்து சிந்தித்தார். எஸ்டேட்டுக்கு உரிய பொருள்கள்- துரும்பானாலும் இப்படி வீசப்படுவதை இவர் கண்டித்தார். இதுவும் தனது மானேஜ்மெண்டில் இது தண்டனைக்குரியது என்று இவர் தீர மானத்திற்கு வந்தார்.

கங்காணி இன்னும் இவருக்கு முன்னால் கூனிகுறுகி நின்று கொண்டிருந்தார். இவரின் மூளையில் 'பாக்கட்டுகளை வீசியது யார்' என்று கேள்வி அலைமோதியது.

ஜெகஜோதி எழுந்து வந்தாள். மானேஜர் ஜானுடைய கைத்தடி இந்தப் பாக்கட்டுகளை கீழே தள்ளி, மண்ணை சிதரவிட்டுள்ளதைப் பார்த்தாள்: கைத்தடி இன்னும் பாக்கட்டுகளின் மீது தொட்டுக் கொண்டிருந்தது ஏதோ ஒரு வேகத்தில் கைத்தடியை இப்புறம் நகர்த்தி, பாக்கட்டுகளை மண்ணைக் கீழே கொட்டி விட்டு எடுத்துக் கொண்டு நிமிர்ந்து, ''நான் இதை வீசியெறியவில்லை. அடுக்கி வைத்திருந்தேன்'' என்றாள்.

மானேஜருடையப் பார்வை அவளின் மீது விழுந்தது. அவரின் பார்வை சரியாக இல்லாததை அவள் உணர்ந்தாள். கண்கள் தறி கெட்ட மாடுகள் மாதிரி எங்கெங்கு மேய்கின்றன...?

பயங்கரமான அமைதி. வெகு நேரமாக யாரும் மூச்சுக்கூட விடவில்லை ஜெகஜோதிக்கு தன்னம்பிக்கை அற்றுப் போய் விட்டது. அந்த அமைதியை அவளால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை. தலை குனிந்தவாறே வேலை செய்பவர்களின் மீது விழிகளை செலுத்தி, ரங்கராஜீ மீது பார்வை நிறுத்தினாள்.

வேலை செய்பவர்கள் யந்திர கதியில் இயங்கிக் கொண்டிருக்கும் போது, தன்னியல்பாகவே அவர்களின் விழிகள் அனுப்பிக் கொண்டிருந்தன. ஒரு கருத்துப் பரிவர்த்தனை நடந்து கொண்டிருப்பதை ஜெகஜோதி உணர்ந்தாள்.

விழிகளிலே ஒரு மொழி! இம் மாதிரியான ஒரு மொழியை விளங்கிக் கொள்வது கடினம். தங்களுடைய முழு வேலையின்

(15-ம் பக்கம் பார்க்க)

**கதை**
**கட்டுரை**
**கவிதைகள்**
**வரவேற்கப்படுகின்றன;**
**அனுப்பும் படைப்புகள்**
**மக்கள் மறுவாழ்வில்**
**ஒரு பக்கத்திற்கு**
**மேற்படக் கூடாது.**

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்மை, பகுதி வேலையின் தன்மை, பிரத்தியேகமாக தோன்றுகிற பிரச்சனைகளை விளங்கிக் கொள்கிற மன நிலைமை, இவ்வாறு தங்கள் முன்னுள்ள நிலைமைகளை யூகித்து உணர்ந்து கொள்வது, வேலையில் ஈடுபட்டிருப்பவர்களிடம் வெகு சாதாரணம்.

தனது விழிகளை அவர்களிடமிருந்து பெற்று மானேஜரைப் பார்த்தாள், ஜெகஜோதி. அவரின் பார்வை பயங்கரமாயிருந்தது. சிவந்து உப்பிய அவரின் கண்கள் தனது உடலில் மேலும் கீழும் விழுந்து எழுகின்றன! கண்களா அவை?

தொண்டையில் விக்கலும், அழுகையும் வந்து விடும்போல் இருந்தது. உடல் குறுகிப்போய் இறுக்கம் அடைந்து விட்டது அவளுக்கு. ஆனால் ஏற்கனவே மனதிற்குள் அழுது விட்டாள்.

"ஆண் பிள்ளை வேலை செய்கிற இடத்தில் உனக்கென்ன வேலை?" மானேஜர் ஜான் சம்பந்தமற்ற ஒரு கேள்வியைக் கேட்டார்.

அவளால் பதிலளிக்க முடியவில்லை. தலையை தாழ்த்திக் கொண்டாள்.

மானேஜர் ஜானுக்கு விசாரணைக்கு இப்படி ஒரு கேள்வி அவசியமற்றது என்று பட்டது. உடனே கங்காணியாரைக் கூப்பிட்டு, ஜெகஜோதியை ஆபீஸுக்கு வரும்படி உத்தரவிட்டார்.

பிறகு சிறிது நேரத்தில் கம்பீரமாக, தொப்பியை இடது கையில் மாற்றிக் கொண்டு, தடியை லாவகமாக சுழற்றிக் கொண்டு, வாயில் புகை குபீரென கிளம்பிக் கொண்டு சென்றார். அவரின் பின்னால் ஜெகஜோதியும் நடந்து சென்றாள்.

ஆபீஸ் பக்கத்திலுள்ள, எஸ்டேட் ஸ்டோர் ரூமுக்குள் விரைப்புடன் சென்றார். ஆபீஸ் பையனை அழைத்து பிளாஸ்கில் தேனீர் கொண்டு வரும்படி சொன்னார். அவன் சென்ற பின்பு ரூமுக்கு வெளியே தயங்கி நின்ற ஜெகஜோதியை அழைத்து "இது என்ன?" என்றார்.

"உரம்!" என்றாள் தயக்கத்துடன்

"பேர் என்ன?"

"பூரியா"

"உன் பேரைக் கேக்கிறேன்" என்றார் அவர்.

உதடுகளில் சிரிப்பை முழுங்கினாள். அவள் இப்பொழுது அவளின் இடது தோளில், அவரின் வலது கை, அமர்ந்தது. கைத்தடியையும், தொப்பியையும், ஏற்கனவே வெளியில் வைத்திருந்தார்.

அவளின் தோளில் பதிந்திருந்த விரல்கள் முதுகுப்புறம் நெருடுவதை அவள் உணர்ந்தாள். அவளின் கண்களில் யாசிக்கும் பார்வை தோன்றியது.

"உனக்கு வேண்டுமா?"

அவள் நிமிர்ந்து நேராக அவரைப் பார்த்தாள்.

'நான் தர்ரேன்" அவளிடம் நகர்ந்து சென்றுக் கன்னங்களுக்கு கைவிரலை மாற்றினார்.

பையன் தேனீர் கொண்டு வந்தான், அவர் வெளியில் சென்று வாங்கி வந்தார். பிளாஸ்க் மூடியில் தேனீரை ஊற்றி அவளுக்கும் தந்தார். அவள் வாங்கிக் கொள்ளவில்லை

'நீயும், உன் தேனீரும்" ஜெகஜோதி பிளாஸ்க் மூடியை பள்ளத்தில் வீசி எறிந்தாள், பாரங்களை கழற்றி வீசியதைப் போல,

ஆபீஸ் காம்பௌண்டுக்குள் கதவை உடைத்துக் கொண்டு, ரங்கராஜும், நர்ஸரியாமில் பிளாஸ்டிக் பையில் மண்ணடிப்பவர்களும் வந்து கொண்டிருந்தார்கள்.

நல்ல வருகை! தேயிலை நாத்துக்களின் தளிர்களைப் போல, அவர்களின் வருகை வேகமாக இருந்தது! O

## விருப்பத்திற்கு...

(முதல் பக்கத் தொடர்ச்சி)

படுத்த முடியாத - கற்பனை செய்துக்கூட பார்க்க முடியாத திட்டமாகும்

இவ்வாறு பதிவு செய்யப்படாதவர்கள் வெளிநாட்டவர் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படுவர் என்னும் பயமுறுத்தப்படுகிறது. இந்த எச்சரிக்கை புரிந்து கொள்ள முடியாதது. ஏனெனில் இலங்கை அகதிகள் இந்தியாவின் பாதுகாப்பின் கீழ் இருப்பதால் இவர்கள் மீது இந்த சட்டம் பிரயோகிக்க முடியாததாகும். மேலும் வெளிநாட்டவர் சட்ட விதிவிலக்கு (1957) சட்டப்படி காமன்வெல்த் நாட்டு பிரஜைகள் 'வெளிநாட்டவர்' என்பதில் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

அகதிகள் தங்களை பதிவு செய்துக் கொள்ளுமாறும், இல்லையேல், பெரும் பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று போலீஸார் மிரட்டுவதாக பல புகார்கள் வந்துள்ளன.

இந்திய அரசும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அகதிகளைப் பற்றி புரிந்து கொள்ள வேண்டுமென நாம் கேட்டுக் கொள்கிறோம். இந்திய அரசு தனது மனிதாபிமான அணுகுமுறையையும், அனுதாபத்தையும் திடீரென நிறுத்திவிட்டு தம்மை பலவந்தமாக வெளியேற்றத் தொடங்கிவிட்டது என, இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட அகதிகள் உணரும் நிலையை உருவாக்கி விடக்கூடாது,

சட்டத்தையும், ஒழுங்கையும் குலைக்கும் வகையில் ஒரு சில இலங்கையர் குற்றச் செயல்களில் ஈடுபடுவதாக செய்திகள் அறியும்போது பெரிதும் வருந்துகிறோம். இப்படிப்பட்ட புல்லுருவிகளை அகற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகளை நாங்கள் முழுமனதுடன் வரவேற்கிறோம். ஆனால் குற்றவாளிகளுக்கு எதிராக எடுக்கப்படும் இம்மாதிரி நடவடிக்கைகள், சூழ் நிலையிலும், வழியில்லாததாலும் இங்கு வந்து தங்கியுள்ள எல்லா இலங்கையரையும் பாதிப்பதாய் இருக்கக் கூடாது.

இந்திய அரசும் மக்களும் நல்கிய உதவிகளுக்கும் அனுதாபத்திற்கும் ஒத்துழைப்புக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விசா நீடிப்பதற்காக வரும் இலங்கையர்களின் விண்ணங்களை கூட்டு மொத்தமாக மறுப்பு தெரிவிக்காமல், ஒவ்வொரு விண்ணப்பத்தின் தகுதியையும் ஆராய்ந்து அவர்களுக்கு விசா வழங்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

-ஆர். ஆர். எஸ்.

## உண்ணாவிரதம்

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய வம்சாவழித் தமிழர்கள் தம்மை இலங்கைக்கு அனுப்புவதைக் கண்டித்து 11-1-88 அன்று உண்ணாவிரதம் மேற் கொண்டனர்.

திருச்சி, தூத்துக்குடி, தாளையூத்தி (நெல்லை), மண்டபம் முதலான பல அகதிகள் முகாம்களில் இந்திய வம்சாவழி தமிழ் அகதிகள் இந்த உண்ணாவிரதத்தை மேற்படி கொண்டனர்.

13-1-88 அன்று அனைத்து அகதிகளும் மதுரை பசும்பொன் முத்துராமலிங்க தேவர் சிலை முன் உண்ணாவிரதம் மேற் கொண்டனர்.

"இலங்கை அரசு எம்மை இந்தியத் தமிழர்கள் என்று இங்கே விரட்டியது இந்திய அரசோ எம்மை இலங்கையர்கள் என்று கூறித்திருப்பி அனுப்புகிறது. அப்படியானால் எமக்கு சொந்தமானது வங்கக் கடல் ஒன்றுதானா ?

ஏற்கனவே கண்ணீர்க் கடலில் மிதந்து கொண்டிருக்கும் எங்களை வங்கக் கடலுக்குள் வீழ்த்தும் இந்த அநியாயத்துக்கு எதிராக குரல் கொடுங்கள் ! எமது போராட்டத்துக்கு ஆதரவு தாருங்கள் ! எமது விருப்பத்துக்கு மாறாக எம்மை இலங்கைக்கு அனுப்புவதை தடுத்து நிறுத்தங்கள் !

மத்திய, மாநில அரசுகளே!

இந்திய வம்சாவழித் தமிழர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்பாதே !

இந்திய வம்சாவழியினருக்கு இங்கயே நிரந்தர மறுவாழ்வு கொடு"

என மத்திய, மாநில அரசுகளைக் கோரி இந்த உண்ணாவிரதம் மேற் கொண்டனர்.

O

## ரிட்மனு தாக்கல்

இலங்கை அகதிகளை அவர்களது விருப்பத்திற்கு மாறாக பலாத்காரமாக திரும்புவதை உடனே நிறுத்தி வைக்க வேண்டும் என்று ரிட்மனு ஒன்று உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பியூசிஎல் என்ற மக்களின் குடியியல் உரிமைக்கான அமைப்பின் தமிழ்நாட்டின் அமைப்புச் செயலாளரான அட்வகேட் ஹென்றி இந்த ரிட் மனுவை தாக்கல் செய்துள்ளார்.

O

Editor & Publisher: T. S. RAJU 1, South Gangai Amman koil 2nd Street, Madras-600 094. Printer: L. S. Srinivasan at Jai Kalidas Press, 29, B. E. Colony, 4th Street, Madras - 600 024.

Advocate DRICTOUR


Regd No. R. N. 42556/83 Regd No. TN/MS (C) 702

MAKKAL MARUVAZHVOO

மக்கள் மறுவாழ்வு



முகவரி :
அஞ்சல் பை எண். 5560
சென்னை - 600 094.


# 1964 ஒப்பந்தத்தில் இந்தியக் குடியுரிமை பெற்றவர் அகதிகளோடு கப்பலில் அனுப்பப்பட்டார்!

அகதியாக வந்ததால், இந்தியக் குடியுரிமை பெற்ற இந்திய வம்சாவழித் தமிழரையே பலவந்தமாக இலங்கைக்குத் திரும்பி அனுப்புவதா ?

இப்படி ஒரு கொடுமை மண்டப முகாமில் நடந்துள்ளது. இத்தகு கொடுமையை மனிதாபிமான மற்ற முறையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடத்துகிறார்கள்.

ஞானேஸ்வரி என்ற பெண்மணி. இவர் ஒரு இந்திய வம்சா வழித் தமிழர்.

இவர் இந்தியாவுக்கு சென்று குடியமர ஸ்ரீமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தில் மனு செய்து குடியுரிமை பெற்றுள்ளார் குடியுரிமையை இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் வழங்கியதைத் தொடர்ந்து, இவருக்கும் இவரது குடும்பத்திற்கும் இந்திய பாஸ்போர்ட்டுகள் வழங்கப்பட்டிருக்கிறது. மறுவாழ்வு திட்டத்தின் மூலம் குடும்ப அட்டைகள் பெற்றுக் கொண்டு இந்தியா திரும்புவதற்கு முன்பாக அங்கு கலவரம் மூண்டதால், அகதிகளோடு அகதியாக இந்தியா வந்து சேர்ந்தனர். அவரைப் போல் பல இந்திய வம்சா வழித் தமிழ் குடும்பங்கள் சிறிமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தில் குடியுரிமை பெற்று பாஸ்போர்ட் பெற்றவர்கள், அவர்களில் பல இங்கு மறுவாழ்வு துறையுடன் தொடர்பு கொண்டு குடும்ப அட்டைகள் பெற்று அகதிகள் என்ற அந்தஸ்திலிருந்து விடுபட்டு தாயகம் திரும்பியோர்களாக மாறியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் ஞானேஸ்வரிக்கும் அவரது குடும்பத்திற்கும் மறுவாழ்வு திட்ட அடிப்படையில் குடும்ப அட்டை பெறவில்லை.

அவர்கள் அகதிகளோடு அகதிகளாக வந்தது தான் கொடுமை அவர்கள் இந்திய குடியுரிமை பெற்றப் பிரஜைகளாக இருந்தும் அவர்களது விருப்பத்திற்கு மாறாக வலுகட்டாயமாக இலங்கை அனுப்பி விட்டனர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள்.

முதலாவது கப்பலில் இவர்கள் ஏற்றப்படுவதற்கு முயன்ற போது இவர் மறுத்துக் கதறியிருக்கிறார். சுற்றியிருந்த அகதிகள் எதிர்ப்பு தெரிவித்ததும் இவ்விடம் விரட்டப்பட்டு விட்டார் ஆனால் இவரது பிள்ளை அனுப்பப்பட்டு விட்டனர். பிள்ளைகள் போனதால் வேறு வழியில்லாது அந்த பெண்மணி இரண்டாவது கப்பலில் சென்று விட்டார்

இவர்களைப்போல இன்னும் பல இந்திய வம்சாவழித் தமிழர்கள் இந்திய குடியுரிமைபெற்றும் இது மாதிரியான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுதிகிலடைந்து அச்சத்திற்கு ஆளாகி இருக்கின்றார்கள்

இது மாதிரி இக்கட்டான நிலைமைக்கு சுமார் 700 குடும்பங்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இவர்களது ' உண்மையான நிலையை அவர்களுக்குள்ள உரிமைகளை புரிந்துக் கொள்ளவோ தயாராக இல்லாத நிலையில் தயவு தாட்சண்யம் மனிதாபிமான மில்லாதவர்களாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அலுவலர்கள் நடந்து கொள்வதாக வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

O

## உண்ணாவிரதம்

நாங்கள் இலங்கையிலிருந்து வந்துள்ள இந்தியத் தமிழர்கள். தமிழகத்திலிருந்து அண்மையில் சென்று குடியேறிய இந்திய வம்சாவழியினர். இந்தியாவில் ரத்த உறவினர்களையும் பூர்விக ஊர், உறவினையும் கொண்டவர்கள். இந்திய குடிமக்களுக்குரிய அத்தனை உரிமைகளையும் சட்ட ரீதியாகப் பெறுவதற்கு உரிமை உடையவர்கள்.

இப்போது இலங்கையின் வடக்கு. கிழக்குப்பகுதிகளிலிருந்து வந்துள்ள இலங்கைக் குடியுரிமையுள்ள பூர்வீகத் தமிழர்களை இலங்கைக்கு திரும்பி அனுப்பும் அதேவேளையில் இந்தியத் தமிழர்களான எம்மையும் திரும்பிச் செல்லுமாறு மத்திய மாநில அரசுகள் நிர்ப்பந்திக்கின்றன.

இது மிகவும் கொடுமையானது, மனிதாபிமான அற்றது நீதியில்லாதது''

இவ்வாறு கோரி, இந்தியாவில் அகதிகளாக வந்திருக்கும்


(15-ம் பக்கம் பார்க்க)


## புதிய மந்திரிசபை பதவியேற்பு

முதல்வராக இருந்த எம். ஜி. ஆர். அவர்களின் மறைவைத் தொடர்ந்து அவரது மனைவி ஜானகி அம்மையார் தலைமையில் 8 மந்திரிகள் கொண்ட புதிய மந்திரி சபை 7-1-88 அன்று பதவி ஏற்றுள்ளது.

புதிய மந்திரி சபையில் வி. என் ஜானகி உட்பட, ஆர்.எம். வீரப்பன் (உள்ளாட்சி அமைச்சர்) ப. உ. சண்முகம் (மக்கள் நல்வாழ்வுத்துறை) சி. பொன்னையன் (கல்வி, சட்டம், வேளாண்மைத்துறை) எஸ். முத்துசாமி (போக்குவரத்து), வி. வி. சுவாமிநாதன் (செய்தி, அற நிலையம்) டி. இராமசாமி (வணிகவரி) ஏ. அருணாசலம் (அரிசனநலம்) ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

எம். ஜி. ஆர் மறைவைத் தொடர்ந்து ;அ. இ. அ. தி. மு. கழகத்தில் பிரிவு ஏற்பட்டுள்ளது இதனால் இந்த மந்திரி சபைக்குரிய பலம் இன்னும் கிடைக்கவில்லை ஜானகியின் அணி, நெடுஞ்செழியன் அணி என்று மேற்படி கழகம் இரண்டாக பிளவு ஏற்பட்டுள்ளது. பிளவைத் தொடர்ந்து இடைக்கால முதல்வராக 'இருந்த நெடுஞ்செழியன், திருநாவுக்கரசு ஆகியோர் பதவி இழந்துள்ளனர்.

எதிர்வரும் 22-ஆம் திகதி சட்டசபை கூட இருக்கிறது. அப்போது புதிய மந்திரிசபை ஆதரிப்போர், எதிர்ப்போர் எவ்வளவு பேர் ? இந்த மந்திரிசபை நிலைக்குமா என்பது மாநில மக்களின் கேள்விக் குறியாகும். O